பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 30 வெள்ளிக்கிழமை (14.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 228

# அரசுடன் இணையும் முடிவில் இருந்து

# இ.தொ.கா., மு.கா. திடீர் பின்வாங்கல்!

## அதனால் ஜனாதிபதி சீற்றம்

கொழும்பு,ஜூலை 14

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அவரது அரசோடு இணைவது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் முன்னர் எடுத்திருந்த தீர்மானத்திலிருந்து கடைசி நேரத்தில் பின்வாங்கியிருக்கின்றன.**

**இந்த இரண்டு கட்சிகளும் அரசோடு இணைந்து அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்கப்போகின்றன என்று அரசியல் வட்டாரங்களில் சில தினங்களாகப் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த விடயங்கள் அவ்விரு கட்சிகளினதும் கடைசிநேர பின்னடிப்புக் காரணமாக வெறும் புஷ்வாணமாகியிருக்கின்றன.**

இந்த இரண்டு கட்சிகளும் அரசோடு சேர்வது என்று முதலில் இணங்கிவிட்டுப் பின்னர் பின்வாங்கியிருப்பது அமைச்சரவை மறுசீரமைப்புக்கான முன்னேற்பாடுகளை செய்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடும் சீற்றத்தைக் கொடுத்திருக்கின்றது என்று கூறப்படுகிறது.

அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் சிறுபான்மை கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார். அந்தக் கட்சிகள் அரசுடன் இணைந்த கையோடு அமைச்சரவை மறுசீரமைப் பொன்றை நடைமுறைப்படுத்தவும் ஜனாதிபதி உத்தேசித்திருந்தார்.

ஆனால், அரசுடன் இணைவதற்கான பேச்சுகள் முடிவடைந்து மேற்படி இரு கட்சிகளும் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்கத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் கடற்பரப்பில் வேட்டுச்சத்தங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நேற்று மாலை 5.30 மணிமுதல் வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டியில் நேற்றிரவு தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஜூலை14

உடுப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள படையினரின் காவலரண்மீது நேற்றிரவு 7.45 மணியளவில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

சுமார் 10 நிமிடங்கள் வேட்டுச் சத்தங்களால் அப்பகுதி அதிர்ந்தது. சேதவிவரம் தெரியவரவில்லை.

அதேவேளை - நேற்று முற்பகல் 11 மணியளவில் கொக்குவிலில் படையினரின் நிலை மீது கிரனேட் வீசப்பட்டது. சேத விவரம் தெரியவரவில்லை. (1)

## குடாநாட்டு சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றப்பணிகளை பகிஷ்கரித்தனர்



யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் உத்தியோகபூர்வ வாகனத்தைத் துரத்திச் சென்று தாக்க முயற்சித்ததாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து குடாநாட்டுச் சட்டத்தரணிகள் நீதிமன்றச் செயற்பாடுகளை நேற்றுப் பகிஷ்கரித்தனர்.

குடாநாட்டில் இயங்கும் நீதிமன்றங்களில் பணிபுரியும் சட்டத்தரணிகள் நேற்று நீதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரு சம்பவங்களில் படையினர் மூவர் நேற்று உயிரிழப்பு

வவுனியாவில் நேற்று நடந்த இருவேறு சம்பவங்களில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

வவுனியா கற்குளம் - தாண்டிக்குளம் வீதியில் கல்மடு என்ற இடத்தில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுமாலை ஐந்து மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இருவர் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். வவுனியா நகருக்கு தென் மேற்கில் 12 கிலோ மீற்றர் தொலைவில் கல்மடு உள்ளது.

பின்னர் மாலை 5.50 மணியளவில் ஓமந்தை முன்னரங்க காவலரணில் மோதல் ஒன்று நடந்தது. அதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

## அப்பல்லோவில் தயா மாஸ்டருக்கு 'அஞ்ஜியோகிராம்' முறை சிகிச்சை

**உடல்நிலை முன்னேற்றம்; ஓரிரு தினங்களில் வன்னி திரும்புவார்**



இருதய நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பு அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டரின் உடல்நிலை தற்போது தேறியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இருதயத்துக்கான இரத்த விநியோகக் குழாயில் ஏற்பட்டிருந்த அடைப்பு 'அஞ்ஜி யோகிராம்' சிகிச்சை மூலம் சீராக்கப்பட்டிருக்கிறது. அப்பல்லோ வைத்தியசாலையின் இருதய

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் படையினர் தாக்குதல் நான்கு போராளிகள் சாவு என அறிவிப்பு

திருகோணமலை,ஜூலை14

திருகோணமலையில் கடவானைப் பிரதேசத்தில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - எல்லைப்பகுதியில் பதுங்கியிருந்த படையினர் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

எல்லைப் பகுதியில் கடமையில் இருந்து தமது போராளிகள் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் வீரச்சாவடைந்த நால்வரின் விவரம் வருமாறு:-

- லெப். கேணல் ஈகன் (முத்துலிங்கம் கலையரசன் - ஆலங்கேணி).
- கப்டன் தீபன் (நாகராசா வேந்தன் - மூதூர்).
- கப்டன் தனுசன் அல்லது வேந்தன் (மட்டக்களப்பு).
- வீரவேங்கை கருணா (தங்கவேல் கருணாகரன் - தம்பலகாமம்) (1)

## புளொட்டின் மற்றொரு பிரமுகர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா, ஜூலை 14

'புளொட்' அமைப்பின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர்களில் ஒருவரான ஸ்ரீஸ்கந்தராஜா (பவன்) நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இவரது சடலம் பலத்த சூட்டுக் காயங்களுடன் நேற்றுக்காலை வவுனியா செட்டிக்குளம் பகுதியில் மீட்கப்பட்டிருக்கிறது.

'புளொட்' அமைப்பினால் அனுஷ்டிக்கப்படும் வீரமக்கள் தினம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை இவர் வவுனியா நகரப்பகுதியில் ஒட்டிக் கொண்டிருந்தார் என்றும்-

அப்போது ஓட்டோ ஒன்றில் அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் இவரைக் கடத்திச் சென்றனர் என்றும்- கூறப்பட்டது.

பின்னர் நேற்றுக்காலை இவர் செட்டிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டர் சிகிச்சை பெற வசதி செய்தமை குறித்து அரசுக்குள் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 14

விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் அவசர மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு வருவதற்கு வசதி செய்து கொடுத்தமை அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலருக்கும், அரசின் நேச அணிகளுக்கும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

[illegible] சிகிச்சை பெறுவதற்காக தயா மாஸ்டர் தரை வழியாகக் கொழும்புக்கு வருவதற்கு அரசு உரிய வசதிகளைச் செய்து கொடுத்திருந்தது. ஆனால், அரசின் இந்த நடவடிக்கையை அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலரும், அரசின் நேச அணியினரும் ஆட்சேபித்திருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கில் அரச படைகள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திவரும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சியிலிருந்து மேலும் சிலர் ஓரிரு தினங்களில் அரசுப் பக்கம்?

## பிரதி அமைச்சுக் கதிரைகள் அவர்களுக்கும் ரெடி!

ஐ.தே.கட்சி எம்.பி. நவீன் திஸாநாயக்க உட்பட சில எம்.பிக்கள் இன்று அல்லது நாளை அரசுடன் இணைய இருக்கின்றனர் என்று நம்பகமாகத் தெரிகிறது.

இவர்களுக்கு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. பிரதி வெளிவிவகார அமைச்சராக நவீன் திஸாநாயக்க நியமிக்கப் படவுள்ளார் என்றும் அரசுப் பக்கம் பேச்சு அடிபடுகிறது.

நவீன் திஸாநாயக்கவும் மேலும் சில ஐ.தே.கட்சி எம்.பிக்களும் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவைச் சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடியுள்ளனர்.

நவீன் திஸாநாயக்க ஏற்கனவே ஐ.தே.கட்சிக்குள் சர்ச்சைக்குரிய எம்.பியென வர்ணிக்கப்படுபவர். நுவரெலிய மாவட்டத்தில் இ.தொ.காவுக்கு ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் இடம் ஒதுக்குவதிலிருந்தே நவீன் திஸாநாயக்க ஐ.தே.கட்சித் தலைமையுடன் முரண்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நூல் வெளியீட்டுவிழா

கோப்பாய்,ஜூலை14

சோதிலிங்கம் கோகிலன் எழுதிய 'ஓவியக் கொள்கைகளும் ஓவியர்களும்' என்னும் நூல் வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

க.நிஷாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள்வங்கி முகாமையாளர் அ.குகதாசனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ்.கிருஷ்ணராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சிறப்புரையை கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலனும் வெளியீட்டுரையை விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசனும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து நூலின் முதற்பிரதியை எஸ்.கே.யோகநாதன் வழங்க அதனை பிரதம விருந்தினர் அ.குகதாசன் பெற்றுக்கொள்வார்.

இதனையடுத்து ஆய்வுரையை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா நிகழ்த்த ஏற்புரையை நூலாசிரியர் சோதிலிங்கம் கோகிலன் நிகழ்த்துவார். (203-72)

# ஐ.தே.கட்சி எம்.பிக்களை அரசில் இணைப்பதால் தீமையும் உண்டு

## எச்சரிக்கின்றார் அமைச்சர் ஜயரட்ண

கொழும்பு, ஜூலை 14

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர்களை ஆளுங்கட்சிக்குள் கொண்டு வருவதில் நன்மைகளும் உள்ளன; தீமைகளும் உள்ளன. இப்போதைக்கு நன்மைகள் இருந்தாலும், எதிர்காலத்தில் அது தீய பலன்களைத் தரக்கூடும்.

- இவ்வாறு எச்சரிக்கின்றார் தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜயரட்ண.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைவது குறித்து நேற்றுக் கருத்துக் கேட்டபோதே இவ்வாறு அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

ஆட்சியை வலுப்படுத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அரசுடன் இணைகின்றார்கள் எனக் கூறலாம். அது இப்போதைக்கு நன்மை தரும் விடயமாக இருந்தாலும் எதிர்காலத்தில் அது எவ்வகையான பலனை ஏற்படுத்துமென்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். அது நல்ல பலன்களைத் தராது என்பதே எனது கருத்து.

மலையக அரசியற் கட்சிகள் அரசுடன் இணைவது ஒன்றும் பெரிய விடயமல்ல. அது வழமையாக நடைபெறும் ஒரு விடயம். ஆனால், பிரதான எதிர்க்கட்சியை இந்த விடயத்துடன் நாம் ஒப்பிடமுடியாது.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் டி.எம். ஜயரட்ண.

### சமய சந்நிதிகளில்

மந்திகை அம்மன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. 16 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (1-173-204)

* * *

தென்புலோலி குரும்பகட்டி ஞான வைரவர் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. விசேட பூசை, வழிபாடுகள், ஞான வைரவர் வீதியுலா வருதல் என்பன இடம் பெறும். (204-173)

* * *

வேலணை தெற்கு தாழையம்பதி ஸ்ரீ ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாகபூசை, மகாபூர்ணாகுதி, விசேட தீபாராதனை, வேத ஸ்தோத்திர ஆசீர்வாஸனம், ராகதாள சமர்ப்பணம் என்பன இடம்பெற்று கும்பாபிஷேகம் இடம்பெறும்.

இந்த உற்சவத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை விசேட சாந்தி, திரவிய ஹோமம் என்பன இடம்பெற்று காலை 9 மணிமுதல் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (204)

### மாணவனை காணவில்லையாம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனைக் காணவில்லை என அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த ஜீவராசா ரதீஸ்ராஜா (வயது 13) என்பவர் கடந்த 11ஆம் திகதி பாடசாலைக்குப் புறப்பட்டார் என்றும் - இன்னமும் வீடு திரும்பவில்லையென்றும் அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார். (1)

## வடக்கு - கிழக்கு மாகாண சேவையில் உள்ள

# தற்காலிக, அமைய, ஒப்பந்த பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம்

திருகோணமலை,ஜூலை14

வடக்கு - கிழக்கு மாகாண அரச சேவையில் பணியாற்றும் சகல தர தற்காலிக, அமைய, ஒப்பந்த அடிப்படை சேவையாளர்கள் அனைவரையும் இப்போது நிலவும் வெற்றிடங்களுக்கு அமர்த்தி, அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான உத்தரவை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மோஹன் விஜேவிக்கிரமா, மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த சேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது 2002ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கத்தினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், குறிப்பிட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாகாண சேவை அரச பொதுநிர்வாகச் செயலாளருக்கு வழங்கிய உத்தரவில், சம்பந்தப்பட்ட பதவிக்கும் தேவையான ஆகக்குறைந்த தகுதியுடைய சேவையாளர்களையும் நிரந்தரமாக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

# காங்கேசனில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் உறவினர்கள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூலை14

காங்கேசன்துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இருவரை அவர்களது பெற்றோர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

மீசாலையைச்சேர்ந்த ஜெயரூபன், கிருஷ்ணானந்தன் ஆகியோர் படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்.

காங்கேசன்துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களது பெற்றோர் பார்வையிட அனுமதிக்கவேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவல அதிகாரிகள் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடம் கோரியிருந்தனர். அதற்கு அவர் அனுமதி வழங்கியிருந்தார்.

இதன்படி, காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயரூபன், கிருஷ்ணானந்தன் ஆகியோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் அவர்களைப் பார்வையிட்டனர்.

ஜெயரூபனின் மனைவி மற்றும் கிருஷ்ணானந்தனின் தாய் ஆகியோரை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் காங்கேசன்துறைக்கு அழைத்துச் சென்றனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட ஆலோசகர் எம்.றெமீடியஸ், விசாரணை அதிகாரி மொறின் நிசாந்தினி ஆகியோர் அவர்களை அழைத்துச் சென்றனர். (1)

# சர்வகட்சி ஆலோசனைக் குழுவுக்கும் டியூவின் அமைச்சுக்கும் தொடர்பில்லை

## அவரே கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 14

"சர்வகட்சி ஆலோசனைக் குழுவுக்கும், இன நல்லிணக்க அமைச்சுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. அவர்கள் எமது அமைச்சில் கூடுவதற்கு இடமளித்துள்ளோம். இன்று (14ஆம் திகதி) குழுவின் கூட்டம் கூடுவதையும் நான் வானொலியில் செய்தி மூலமே அறிந்தேன்."

- இப்படிக் கூறுகின்றார் இன நல்லிணக்க அமைச்சர் டியூ குணசேகர. நேற்று 'உதயனுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை சர்வகட்சி ஆலோசனைக் குழுக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது சர்வகட்சி ஆலோசனைக் குழு இன நல்லிணக்க அமைச்சின் கீழ் இயங்குமெனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் நான் அங்கத்துவம் வகிக்கவில்லை. அவர்கள் எது பற்றிப் பேசப்போகின்றார்கள் என்பதும் எனக்குத் தெரியாது - என்றும் அமைச்சர் டியூ குணசேகர கூறினார்.

### கிளிநொச்சி வலய ஆங்கிலதினப் போட்டிகள்

வட்டக்கச்சி,ஜூலை14

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கடையேயான ஆங்கிலதினப் போட்டிகள் இன்றும் நாளையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 3இற்கு மேற்பட்ட மாணவர்களிடையே நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பாடசாலை மட்டங்களிலிருந்து தெரிவாகிய மாணவர்களையும் பொறுப்பாசிரியரையும் மு.ப. 8.30 மணிக்கு உரிய இடத்திற்கு சமுகமளிக்குமாறு கரைச்சிக்கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ.அரியரத்தினம் கேட்டுள்ளார். (1-405)

# யுத்தத்தின் மூலம் தீர்வு என்ற கருத்தை அரசு நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 14

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு யுத்தத்தின்மூலம் தீர்வு காணப்படவேண்டுமென்று ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் விடுத்துவரும் கோரிக்கைகளை அரசு நேற்று முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டது.

பேச்சுகள் மூலம் தீர்வு காண்பதில் அரசு உறுதியாக இருப்பதாக, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போது அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணப்படவேண்டுமென ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் வலியுறுத்தி வருவது குறித்து அங்கு கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென்று கூறுவதை ஏற்க முடியாது. பேச்சுகள் மூலம் தீர்வுகாணலாமென்பதே ஜனாதிபதியினதும், அரசினதும் நம்பிக்கை. யுத்தத்தின்மூலம் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்ட நாடுகள் உலகில் இல்லை. பேச்சுகள் மூலமே உறுதியானதும், நிரந்தரமானதுமான தீர்வை எட்டலாம்.

தீர்வு விடயத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கலாம். அதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எமது நிலைப்பாட்டில் நாம் தெளிவாக இருக்கிறோம் - என்று கூறினார் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா.

# மீன்பிடித் தடைகளை நீக்குமாறு கோரி மன்னாரில் விரைவில் பணிப்புறக்கணிப்பு

மன்னாரில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விதித்துள்ள மீன்பிடித்தடையை நீக்கக்கோரி மாவட்டம் தழுவிய அனைத்துச் செயற்பாடுகளையும் செயலிழக்கச் செய்யும் வகையில் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தப்போவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பேசாலை பள்ளிமுனை ஆகிய முக்கிய மீன்பிடி மையங்களில் மீன்பிடிக்க கடந்த மாதம் முதல் கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

இதனால், தொழிலாளர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்துறைகளில் நாளாந்தம் பல மில்லியன் ரூபா கடலுணவு வாணிபம் நடைபெற்றுவந்தது.

இலங்கைத் தீவில் யாழ்ப்பாணத்துக்கு அடுத்து அதிகளவில் மீன்பிடி நடைபெறும் இடமாகப் பேசாலை விளங்குகின்றது. தற்போது கடற்படையினரது தடையால் அங்கு மீன்பிடிச் செயற்பாடுகள் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன.

இந்நி[illegible] வாய்க்கிழமை மன்னார் மாவட்ட மீன்பிடித் தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தொழிலாளர்கள் ஒன்றுகூடி ஆலோசனை நடத்தினர்.

அக்கூட்டத்தில் மாவட்டம் முழுவதும் கடைகள் பூட்டப்பட்டு, போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு முழுமையான செயலிழப்பு மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# அடிக்கல் நடும் விழா

வடமராட்சி,ஜூலை14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் ஆரம்பிக்கப்படவுள்ள உதைபந்தாட்டப் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நடும் விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டரங்கில் லீக்கின் தலைவர் டி.எம்.வேதாபரணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

[illegible] அரச அதிபர் கே.கணேஷ் [illegible] விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டுவைப்பார்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன உதவிச் செயலாளர் அன்ரன் தங்கேஸ்வரன் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்வார். பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், மருதங்கேணி பிரதேச செயலர் வி.வீரபத்திரபிள்ளை, பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி, வடமராட்சி கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜா ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொள்வர். (173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தீர்வு விரைவில் சாத்தியமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் நோக்கில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் சர்வகட்சி ஆலோசனைச் சபையின் முதலாவது கூட்டத்தில் கடந்த செவ்வாயன்று உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தீர்வுக்கான வரையறைகளை உருவாக்கும் அந்த முயற்சி விரைவாகவும் சாத்தியமானதாகவும் இருக்கவேண்டும் என்று கூறியிருந்தார். நீதியானதும் நிலைத்து நிற்கக்கூடியதுமான சமாதானத்தை வழங்குவதற்காக நாடு இனிமேலும் காத்திருக்கமுடியாது என்றும் அவர் கூறியிருந்தார்.

ஆனால், அவரது கருத்தை இலங்கைத்தீவு மக்கள் கிரகித்து, உள்வாங்கிக்கொண்டு, அந்த விளைவுப்போக்குக் குறித்து தமக்குள் அலசிப் பார்ப்பதற்கு முன்னர் புதிய அறிவிப்பு ஒன்று அரசுத் தரப்பிலிருந்து வெளிவந்திருக்கின்றது.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவோ அல்லது அதையொட்டிய நிபுணர் குழுவோ தீர்வுக்கான வரையறைத் திட்ட யோசனையைச் சமர்ப்பிப்பதற்கு காலநேரக் கட்டுப்பாடு ஏதும் கிடையாது என்று அரசுத்தரப்பில் அரசின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்திருக்கின்றார்.

அத்தகைய குழுக்களுக்கு கட்டுப்பாடு எதையும் விதிக்க ஜனாதிபதி விரும்பவில்லை. அதனால் கால வரையறைகளை அவற்றுக்கு ஜனாதிபதி வழங்கவில்லை என்றும் அரசுப் பேச்சாளர் கூறியிருக்கின்றார்.

அரசின் எந்த நடவடிக்கையை எடுத்தாலும் 'மஹிந்த சிந்தனை' குறித்துப் பீற்றிக் கொள்ளும் இலங்கை அரசுத்தரப்புக்கு, இது விடயத்தில் - தீர்வு முயற்சி சம்பந்தமாக - அதன் வேதாகமப் புத்தகமான மஹிந்த சிந்தனையிலிருந்தே சில விடயங்களைச் சுட்டிக்காட்டுவது இன்றைய சந்தர்ப்பத்தில் அவசியமானதாகின்றது.

*''நான் பதவியேற்றவுடன் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சகல ஜனநாயகக் கட்சிகளுடனும் 'பிரிக்கப்படாத நாடு- பெரும்பான்மையானோர் இணக்கப்பாடு - கௌரவமான சமாதானம்' என்ற கொள்கை அடிப்படையில் நான் பேச்சுகளைத் தொடங்குவேன்.*

*''நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத அரசியல் கட்சிகளுடனும் கூட நான் இத்தகைய கலந்துரையாடல்களை மேற்கொள்ளத் தொடங்குவேன். நான் விசேடமாக மகாசங்கத்தினருடனும், பிற சமயப் பெரியார்களுடனும், சிவில் அமைப்புகளுடனும் - குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் அமைப்புகளுடனும்- கலந்துரையாடல்களைச் செய்வேன். அத்தகைய உரையாடல்களை நான் மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்வேன்.''-* இப்படித்தான் தமது தேர்தல் விஞ்ஞாபனமான 'மஹிந்த சிந்தனை'யில் மஹிந்தர் கூறியிருந்தார்.

அத்தகைய கலந்துரையாடல்களை நிறைவு செய்வதற்கு அவர் கூறிய மூன்றுமாத கால அவகாசம் மூன்று மடங்கு காலத்தைக் கடக்கும் நிலையில்தான் கலந்துரையாடலின் அங்குரார்ப்பணக் கூட்டமே நடந்திருக்கின்றது.

அக்கலந்துரையாடலின் பெறுபேறு விரைவாகக் கிட்டுவதோடு சாத்தியமானதாக அமையவேண்டும் என்று ஜனாதிபதி இப்போது கூற, அவரது அரசின் பேச்சாளரோ அக்கலந்துரையாடலைப் பூர்த்தி செய்வதற்குக் காலவரையறை, கட்டுப்பாடு எதுவும் கிடையாது என்று விளக்கமளிக்கின்றார்.

ஆக, மூன்று மாதத்துக்குள் பூர்த்தி செய்வேன் என்று தனது 'மஹிந்த சிந்தனை' யில் - தேர்தல் விஞ்ஞாபனத்தில் - ஜனாதிபதி மஹிந்தர் வழங்கிய வாக்குறுதி, மூன்று ஆண்டுகள் கடந்தும் பயனுள்ள - சாத்தியமான- பெறுபேற்றைத் தருவதாக நடக்கப் போவதில்லை என்பது இப்போதே தெளிவாகிவிட்டது.

இனப்பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்ப்பது தொடர்பாக 'மஹிந்த சிந்தனை'யில் அவர் வெளியிட்ட கருத்து நிலைப்பாடு நிலையான - நின்று நீடிக்கக்கூடிய - நீதியான - தீர்வு ஒன்றைத் தரும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு அடியோடு இல்லை.

இலங்கையின் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி அரசுக்கட்டமைப்பு ஆகியவற்றைப் பேணி, மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற சித்தாந்தங்களுக்குள் சிறைப்படாமல் பெரும்பான்மையானோரின் இணக்கப்பாட்டோடு சமாதானத் தீர்வைத் தாம் காண்பார் என்று 'மஹிந்த சிந்தனை'யில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சிறுபான்மையினரான தமிழர்களின் நீதியான - நியாயமான - அபிலாஷைகளைப் புறக்கணித்து, பெரும்பான்மையினரான சிங்களவர்களின் அதிகாரத் திணிப்பைச் செலுத்தியதால்தான் இந்தத் தீவில் இத்தகைய இனவெறி யுத்தம் வெடித்தது. அந்த யுத்தத்துக்கு அமைதித்தீர்வு காண்பதற்கு பெரும்பான்மையானோரின் இணக்கப்பாடு என்ற வினையைத் திரும்பவும் கொண்டுவந்து செலுத்துவதில் - செருகுவதில்- அர்த்தமில்லை. அது நியாயத்தீர்வுக்கு வழி செய்யாது. பெரும்பான்மையினரான சிங்களவர்களின் அடக்குமுறை ஆட்சியை உறுதிப்படுத்தும் ஒரு கட்டமைப்புக்கே மீண்டும் அது வழிவகுக்கும்.

தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை நியாயமாக- போராட்ட நோக்கின் ஊடு பொருளாக - வேறு வார்த்தைகளில் கூறுவதானால் போராட்ட நியாயத்தின் மூல ஆன்மாவாக - இருப்பது அவர்களது மரபு வழித் தாயகமும் சுயநிர்ணய உரிமையும்தான்.

அவற்றை நிராகரிக்கும் ஒரு தீர்வைத்தான் மஹிந்த சிந்தனை தனது திட்டமாக முன்மொழிகின்றது.

அதுதான் இப்போதும் ஜனாதிபதி மஹிந்தரின் நிலைப்பாடாக இருக்குமானால், மூன்று மாதங்கள் அல்ல, மூன்று வருடங்கள் அல்ல, இன்னும் மூன்று தசாப்தங்கள் கடந்தாலும் இந்த இனச்சிக்கலுக்கு அமைதி வழித் தீர்வு சாத்தியமில்லை என்று உறுதியாக - அடித்து - கூறமுடியும்.

ஆகவே, கடந்த செவ்வாயன்று தாம் ஆற்றிய உரையில் அவர் குறிப்பிட்டபடி தீர்வு முயற்சி சாத்தியமானதாகவும் விரைவானதாகவும் இருக்கவேண்டும் என்பது வெறும் வாய்ப்பந்தல்தான். செயலில் சாத்தியமல்ல என்பது ஓரளவு தெளிவாகின்றது.

# நீதிபதிகளின் கௌரவத்தைப் பாதுகாக்க யாழ். சட்டத்தரணிகள் இணைந்து தீர்மானம்

நீதிபதிகளின் கௌரவத்தைப் பேணிப் பாதுகாப்பதில் ஒருமனதோடு செயற்படுவதென யாழ்.மாவட்டச் சட்டத்தரணிகள் இணைந்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் படையினரால் அச்சுறுத்தலுக்கும் அவமரியாதைக்கும் உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட சட்டத் தரணிகள் சங்கங்களின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கூட்டமொன்றை நடத்தினர். யாழ்.நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு இராணுவத்தினரால் ஏற்பட்ட அச்சுறுத்தலையும் அவமரியாதையையும் அறிந்து யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.

நீதி நிர்வாகத்தில் நீதிபதிகள் இடம் புனிதமானதும் போற்றுதற்கு உரியதுமான ஒன்றாகும். சமுதாயத்தில் நீதிபதிகள் உயர் மதிப்பும் மரியாதையும் அளிக்கப்படவேண்டியவர்கள். நீதியை நிலைநாட்டுவதில் அச்சமும் தலையீடும் இன்றி பாரபட்சமற்ற முறையில் நீதிபதிகள் பணியாற்றுவதற்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிர்வகிக்கும் துறையினர் நீதிபதிகளுடைய கௌரவத்தையும் மரியாதையையும் உறுதிப்படுத்துவதில் முனைப்போடு செயற்படுவது இன்றியமையாததாகும்.

நீதிபதிகள் அச்சுறுத்தகளுக்கும் அவமரியாதைக்கும் உள்ளானதால் நீதி நிர்வாகம் என்பது கேலிக்குரியதாகிவிடும்.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கையையும் அவமரியாதையையும் யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் ஏற்படாவண்ணம் சம்பந்தப்பட்ட தரப்பினர் உறுதிசெய்ய வேண்டும் என்று பகிரங்கவேண்டுகோள் விடுக்கின்றனர்.

நீதிநிர்வாகத்தில் நீதிபதிகளின் உயர் மதிப்பையும் கௌரவத்தையும் பேணிப்பாதுகாப்பதில் யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் அனைவரும் ஒருமனதோடு செயற்படுவது இத்தால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் பிரதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி எஸ்.தியாகேந்திரன், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (86-111-190)

# மாகாண முகாமைத்துவ சேவையில் இணைவதற்கு மீண்டும் சந்தர்ப்பம்

## பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கையில் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இதுவரை இணைந்து கொள்ளாத உத்தியோகத்தர்களை குறித்த சேவையில் இணைத்துக்கொள்ள விண்ணப்பிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் தமது சுற்றறிக்கையில் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக மாகாணத்தில் உள்ள திணைக்களத் தலைவர்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் கீழ் 6 பதவிகளைச் சேர்ந்த அலுவலர்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, கணக்கு பதியுநர், சிறாப்பர் சேவை, பண்டகசாலைக் காப்பாளர் ஆகிய சேவைகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு மாகாண முகாமைத்துவ சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். அலுவலர்களின் விருப்பத்தின் அடிப்படையில் உள்ளீர்ப்பு இடம்பெற்றுள்ளது.

இதுவரை புதிய சேவையில் உள்வாங்கப்படாதவர்கள், அவர்கள் சார்ந்த சேவைகளையும் பெயர்ப்பட்டியலையும் கடிதம் கிடத்து ஒரு வாரத்திற்குள் அனுப்பிவைக்கவேண்டும் என மாகாண செயலாளர் கேட்டுள்ளார். (185)

# கடலுக்குச் செல்ல அனுமதியில்லை; முனைப்பகுதி மீனவர்கள் முறைப்பாடு

நல்லூர்,ஜூன்14

நேற்று வியாழக்கிழமை கடற்றொழிலுக்குச் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை என்று வடமராட்சி முனைப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர்கள் சம்மேளனத்தில் முறையிட்டுள்ளனர்.

அன்றைய தினம் வடமராட்சிக் கடலில் அசம்பாவிதம் இடம்பெற்றதாகக் கூறியே கடலுக்குச் செல்லத் தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் -

ஆனால், அன்று கடலில் அசம்பாவிதம் ஏற்பட்டதாகத் தமக்குத் தெரியவில்லை என்றும் -

இதேகாரணத்தைக் கூறியே தம்மைக் கடற்றொழிலுக்குச் செல்ல விடாது அடிக்கடி படையினர் தடுத்து வருகின்றனர் என்றும் -

சம்பந்தப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய கெடுபிடிகளால் தொழிலைச் சீராக மேற்கொள்ளமுடியாது தாங்கள் வருமானத்தை இழக்கிறார்கள் என்றும் -

அதனால் தமது குடும்பங்கள் வறுமையாக உள்ளன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (111)

# இரு படகுகள் கரை திரும்பவில்லை

யாழ்ப்பாணம்,ஜூலை14

வடமராட்சி முனைப் பகுதியிலிருந்து கடந்த புதன்கிழமை கடலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்கள் சிலர் நேற்று மதியம் வரை கரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இரு படகுகளில் சென்ற இவர்கள் நேற்றுக் காலை கரைதிரும்பவேண்டும். ஆனால் நேற்று மதியமாகியும் இவர்கள் கரை திரும்பாததால் அவர்களது உறவினர்கள் அச்சமடைந்திருந்தனர்.

# இராமகிருஷ்ண மிஷன் பவளவிழாவுக்கு மாணவரிடையே கல்விசார் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் பவளவிழாவை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில் பாடசாலை மாணவரிடையே குழுவாகவும் தனியாகவும் கல்விசார் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் கட்டுரை, ஓவியம்,கவிதை, வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம்(பெண்கள் மட்டும்), ஓரங்க நாடகம் போன்ற ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தத்தக்க வகையில் போட்டிகள் அமையும்.

குழுப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் பங்குபற்றும் போட்டிகள் குறித்த விவரங்களை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் 'சி.சிவமோகன், செயலாளர் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம், மானிப்பாய் வீதி, தாவடி தெற்கு' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இப்போட்டிகள் யாவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்.

தனிநபர் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தெரிவு செய்த தலைப்புகளில் தமது ஆக்கங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் 'பவளவிழாப் போட்டிகள்' ராமகிருஷ்ண மிஷன், இல.40 ராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06 என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை 0112-588253, 011 - 5513 805, 077-7063100 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என சேவாச்சிரமத்தின் கௌரவ இணைச் செயலாளர் சி.சிவமோகன் தெரிவித்தார். (204)

# கலைப்பீட கற்றல் செயற்பாடுகள் திங்களன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்.பல்கலைக்கழக கலை, இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் மற்றும் சட்டம் ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு (2005/2006 இற்கானது) வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.

மேற்படி கற்கைநெறிகளுக்குத் தெரிவான மாணவர்கள் அனைவரும் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் சமுகமளிக்குமாறு கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அறிவித்துள்ளார்.

கலைப்பீடத்திற்கு விசேட அனுமதியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட புதுமுக மாணவர்களும் மேற்படி வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும். இதேவேளை - சிரேஷ்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் நடைபெறும் என்றும் - பீடாதிபதி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

ஆனி - 31
சனிக்கிழமை
15.07.2006
திதி : பஞ்சமி
முன்னிரவு: 10.43
நட்சத்திரம் : சதயம்
முற்பகல்: 07.52
சுபநேரம் : 03.00 - 4.30
ராகுகாலம் : 09.00 - 10.30

## உதயவாக்கு

ஒரு முட்டாள் கூட அதிர்ஷ்டத்தால் அவ்வப்போது சரியாக இருப்பதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சப்ரகமுவ பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் கவனத்திற்கு**

2005/2006 அனுமதிபெற்ற மாணவர் அனைவரும் கலந்துரையாடலிற்கு 17.07.2006 முற்பகல் 10.30 இற்கு New Science Hall இற்கு தவறாது சமுகமளிக்கவும்.

**தமிழ் மாணவர் ஒன்றியம்,**
**சப்ரகமுவ பல்கலைக்கழகம்.**

(52223)
(21-32-11-19)



## துயர் பகிர்கின்றோம்

யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையின்
முன்னாள் அதிபராகிய

**பொன்னையா அருள்தாசன்**

அவர்கள் இயற்கையெய்திய செய்தி கேட்டு நாம் துயருறுவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/50202)
(32-11-19)

**யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலைச் சமூகம்.**


# வைகறை மலர் வெளியீட்டுவிழா

வலி.வடக்கு,ஜூலை14

தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் வெளியிடப்படும் வைகறை மலர் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் செல்வி அ.கந்தையா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் கலந்துகொள்வார்.

நூலினை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் வெளியிட்டுவைக்க யாழ். மாநகர சபை ஆணையாளர் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட பேராசிரியர் சி.சிவலிங்கராசா நிகழ்த்துவார்.

(68)


## இடம்மாற்றம் பற்றிய அறிவித்தல்

*இல. 253, ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த எமது லக்ஷ்மி ஒகனைசேஷன் ( Bata ஏகவிநியோகஸ்தர்கள்) களஞ்சியமும் காட்சியறையும் பின்வரும் முகவரிகளுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.*

★ **களஞ்சியமும் மொத்த வியாபாரமும்:**

**லக்ஷ்மி ஒகனைசேஷன்**
4ஆவது ஒழுங்கை,
25, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(இந்த முகவரி பிறவுண் வீதியில் அமைந்துள்ள மின்சார சபைக் காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்குமிடையில் அமைந்துள்ளது).

★ **காட்சியறையும் சில்லறை வியாபாரமும்:**

இல.345, கஸ்தூரியார் வீதி
(உதயன் பணிமனை அருகில்),
யாழ்ப்பாணம்.

(சி/50199) (24-32-11-19)

**- முகாமையாளர்.**



# THE MOTHER AND CHILD



அனைத்து விதமான தாய்,சேய் பராமரிப்பு பொருள்கள் மற்றும்
பிரசவத்திற்கு தேவையான பொருள்களுக்கு விசேட கழிவு உண்டு

**இல.160 E, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்** (நாகம்ஸ் சினிமா எதிரில்).

T.P.: 0717556677

உண்மையான தரம்!

நியாயமான விலை!

**குழந்தைகளுக்கான**
விளையாட்டுப் பொருள்கள், இதர பராமரிப்பு பொருள்கள், உடைகள், தொட்டில்கள்.

நம்பி நாடுங்கள் எமை!

**தாய்மாருக்கான**
பிரசவத்திற்குத் தேவையான பொருள்கள், உடைகள், அழகுசாதனப் பொருள்கள்


அனைத்தும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்.

புதியதாய்ப் பூமியில் காலடி பதிக்கும் குழந்தைச் செல்வங்களின் மென்மையான அரவணைப்பிற்கு...


# நெஞ்சைவிட்டகலா

## முதலாம் ஆண்டு நினைவுகள்

தோற்றம் 19 - 07 - 1966



மறைவு 14 - 07 - 2005

அமரர்

**பஞ்சாட்சரம் சிவகுமார்**

மாதங்கள்
பன்னிரண்டு
மழைக்காலம் - எம்
கண்ணில்!

கண்ணான - எம்
கண்ணே
காணவில்லை - உன்
வதனம் ஓர் ஆண்டாய்

இரவுகள்
விடிந்தாலும்
முடியாது எம் சோகம்
விடியாது எம் வானம்


சிவகுமார் நீயும் ஏனோ
சிவலோகம் சென்றுவிட்டாய்?
சிலையாகிப் போனோம் நாங்கள்!

உனை சுமந்த
தோள் மீது
உன்நினைவுதனை
சுமக்கின்றோம்

யாரும் எமக்கில்லை
கண்ணில் நீரும் இனி இல்லை
ஆனாலும் அழுகிறோம் - உன்
ஆன்மா ஈடேற தொழுகின்றோம்!

## 3ஆம் மாத நினைவுகள்

தோற்றம் 11 - 07 - 1970



மறைவு 13 - 04 - 2006

அமரர்

**பஞ்சாட்சரம் கிருபாகரன்**

(சாரங்கன் நகைமாட உரிமையாளர்)

முந்நூறு நாள்கள்
முத்தென காத்து
பெத்தெடுத்தவனே!

துப்பாக்கிக்கு இரையாகி
தொண்ணூறு நாள்கள்
ஆனதடா!

சமாதானத்தின்
நிழலில் சந்தோசமாயிருந்தோம்
பிசாசுகளின் கரங்கள் - உனை
பிடுங்கிச் சென்றதடா!

மரணத்தின் ஓலமது
[illegible]தேசமதில்

மனித வாழ்வு
சாத்தியமோ?

உன் உயிர் குடித்த
பேய்களுக்கு - எம்
அழுகுரல்கள்
கேட்டிடுமா?

வேருக்கு - நீர்
இறைத்தால்
விழுதுகளும் பூத்திடுமா?

வெந்தபுண்ணில்
வேல் விழுந்தால்
வேதனைகள் ஆறிடுமா?

**- குடும்பத்தினர்.**

(சி/50207) (24-11-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் தவறு என பொதுமக்கள் விசனம்!

கரவெட்டி,ஜூலை14

சமுர்த்தி பயனாளிகள் தெரிவுக்கான பதிவில் தவறு இடம்பெற்றுள்ளதாக வடமராட்சி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வருடத்திற்கான சமுர்த்தி நிவாரண முத்திரை பெறத் தகுதியானவர்களை பதிவு செய்ய வடமராட்சியில் பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பிரதேச செயலகங்கள் ஊடாக ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவில் ஈடுபட்டனர்.

இவர்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் சமுர்த்தி தலைமைச் செயலகம் சமுர்த்தி முத்திரை பெறத் தகுதியானோரின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இப்பட்டியலில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் பலவும் இடம்பெறவில்லை என்று கூறப்படுகிறது. மாறாக சமுர்த்தி முத்திரைபெறத் தகுதியற்ற சிலரின் பெயர்கள் பயனாளிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பயனாளிகள் தெரிவுக்கான பதிவில் இடம்பெற்ற தவறுகளே இந்த முறையற்ற தெரிவுக்குக் காரணம் என்று பயனாளிகளுக்குரிய தகுதி பெற்றிருந்தும் தெரிவாகாத குடும்பங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டால் உரிய பதில் கிடைப்பதில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தாங்கள் இதற்காக பணத்தையும் நேரத்தையும் செலவிட்டு அலையமுடியாதுள்ளனர் என்றும் -

பதிவுகளில் ஏற்பட்ட தவறுகளைக் களைந்து தகுதியான அனைவருக்கும் சமுர்த்தி நிவாரண முத்திரை கிடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் -

பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(70)

## சிறுவர் நலன் பேண வடமராட்சியில் குழு

கைதடி,ஜூலை14

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிறுவர்களின் நலன் பேண சிறுவர் பாதுகாப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களின் உதவியுடன் கரவெட்டி இராஜ கிராமத்தில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் நலன் பேணல், கல்வி மேம்பாடு, கல்விபெற உறுதிசெய்தல், சிறுவர் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் உட்பட பல்வேறு நடவடிக்கைகள் இக்குழுவினால் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.(204-70)



போரூட் நிறுவனத்தினால் நாலு லட்சத்து இருபதாயிரம் ரூபா செலவில் சோழாவத்தைக் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுமண்டபம் அண்மையில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது.

போரூட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஆன்மேரி ஆஸ்க் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். போரூட் நிறுவன ஆற்றுப்படுத்தல் உத்தியோகத்தர் கே.குணேந்திரதாசன், சோழாவத்தை மாதர் சங்கத் தலைவி மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

# பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை விடுதிகளைப் புனரமைக்க நடவடிக்கை

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இயங்காதிருக்கும் நோயாளர் விடுதிகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உறுதியளித்தார்.

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் சி.சிவலிங்கம் ஆகியோர் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை கடந்த வியாழக்கிழமை மேற்கொண்டனர்.

அப்போது அவர்களிடம் வைத்தியசாலையின் குறைபாடுகள், தேவைகள் குறித்து அபிவிருத்திச் சங்கத்தினரும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருத்தேவி திருநாவுக்கரசும் எடுத்துக்கூறினர்.

மேலும் வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகள் இயங்காமல் இருப்பதால் நோயாளர் தங்கிச் சிகிச்சைபெறமுடியாதுள்ளது. இதனால் வேறு பிரதேச வைத்தியசாலைகளை நாடவேண்டி இருப்பதால் அவர்கள் பெரும் சிரமங்களை அடைகின்றனர்.

வைத்தியசாலையிலிருந்து அவசர நோயாளரை வேறு வைத்திய சாலைக்கு மாற்றுவதற்கு அம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தப்படவில்லை. - இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுப்பதோடு அம்புலன்ஸ் வாகனம் ஒன்றும் பெற்றுத்தரப்படும் என அவர் உறுதி கூறினார். (204-135)

## சீரமைக்கப்பட்ட வீதிகள் திறப்பு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடி, நாவற்குழிப் பிரதேசங்களில் சீரமைக்கப்பட்ட ஐந்து சிறிய மணல் வீதிகள் கடந்த வெள்ளிக்கிழமை வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் நிதியுதவியுடன் பிரதேச மக்களின் பங்களிப்புடனும் இவ்வீதிகள் திருத்தி அமைக்கப்பட்டன.

நாவற்குழி வடக்கு செல்வநகர் கிராமத்தில் இருவீதிகளும் பாரதி கிராமத்தில் ஒரு வீதியும் நாவற்குழி தெற்கு கடற்கரை வீதியும் கைதடிமேற்கில் ஒரு வீதிகளுமாக ஐந்து வீதிகள் இவ்வாறு திருத்தியமைக்கப்பட்டன.

இவ்வீதிகளை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உபதலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் திறந்துவைத்தார். (204-ரி)

### — உலக உணவுத் திட்ட உதவியுடன் —

# கைதடி, நாவற்குழி கிராமங்களில் பெண்களுக்கு சுயதொழில் பயிற்சிகள்

## செயற்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்துகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை14

தென்மராட்சியில் போரால் பாதிக்கப்பட்டு பின்தங்கியுள்ள கிராமங்களில் இருக்கும் பெண்களுக்கு சுய தொழில் பயிற்சிகளை வழங்கும் செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கிராமங்களில் உள சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் செயல் திறன் அரங்க இயக்கம் இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கைதடி, நாவற்குழி பகுதிகளில் உள்ள 15 கிராமங்களில் முதற்கட்டமாக இந்தச் செயற்றிட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் கிராமப் பெண்களுக்கு சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வாரத்தில் குறைந்தது இரு நாள்கள் பெண்கள் பொது இடத்தில் கூடி இந்தப் பயிற்சிகளைப் பெறுகின்றனர்.


இலகுவானதும் அதிக மூலதனம் தேவைப்படாததுமான தொழிற் பயிற்சிகள் தம்மால் இப்போது வழங்கப்பட்டு வருவதாக செயல் திறன் அரங்க இயக்க அலுவலர் க.சீலன் தெரிவித்தார். இப்பயிற்சிகள் பெண்களை சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடத் தூண்டுவதுடன் அவர்களுக்கு வருமானத்தை ஈட்டும் வழிவகைகளையும் ஏற்படுத்திக்கொடுக்கும் என்றார் அவர்.

அதேவேளை, இப்பயிற்சிகளில் பங்கேற்கும் பெண்களுக்கு ஊக்குவிப்பாக - அவர்களது தொழில் முயற்சிக்கான ஒரு கொடுப்பனவாக - உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன. உலக உணவுத் திட்டத்தின் ஆதரவுடன் இந்த ஊக்குவிப்பு வழங்கப்படவுள்ளது. அதற்கான அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உதயநகர், கைதடி மேற்கு, குமரநகர், கைதடி மத்தி,கள்ளிநகர், இராஜபுரி, நவபுரம், 300 வீட்டுத் திட்டம், செல்வநகர், வீரபத்திரர் கோயிலடி, நாவற்குழி தெற்கு, தச்சன்தோப்பு, வேலம்பிராய் சரஸ்வதி, கோயிலாக்கண்டி மத்தி, கைதடி நாவற்குழி தெற்கு ஆகிய கிராமங்களிலேயே தற்போது இந்தச் செயல் திட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந்தக் கிராமங்களில் பெண்களுடனும் சிறுவர்களுடனும் உளசமூகச் செயற்றிட்டங்களில் செயல் திறன் அரங்க இயக்கம் கடந்த 6 மாத காலமாக ஈடுபட்டுவருகின்றது என அமைப்பின் திட்ட முகாமையாளர் பு.ரஜனி தெரிவித்தார். ஏற்கனவே தமது உளச் சமூகத் திட்டத்தில் இணைந்துள்ள பெண்களுக்கே தற்போது சுயதொழில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் கூறினார்.

போர் மற்றும் நெருக்குவாரங்களால் பெரிதும் உளத் தாக்கதிற்கு உள்ளாகியுள்ள இப்பகுதிப் பெண்களையும் சிறுவர்களையும் இயல்பு நிலைக்கு கொண்டுவந்து அவர்களை உளரீதியில் மேம்படுத்துவதே எமது செயற்றிட்டம். அதன் ஒரு பகுதியாகவே இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உலக உணவுத் திட்டமும் இந்தத் திட்டத்தில் எமக்கு உறுதுணையாக இருக்கின்றது. பயிற்சிக்கு வரும் பெண்களுக்கு அவர்கள் உலர் உணவு தருவதற்கு சம்மதித்திருக்கிறார்கள்'' - என்றார் அவர். (ம)




## கைத்தொழிலுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

கிராம மட்ட சிறுகைத்தொழில் அபிவிருத்திக்காக ஐ.ஓ.எம். நிறுவனம் உதவிகளை வழங்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக குருநகர் பெஸ்கி சனசமூக நிலயை சமூகத்தினருக்கு மெழுகுதிரி தாயரிப்பதற்கான உபகரணங்களும் அதற்கான மூலப்பொருள்களும் வழங்கப்படவுள்ளன. (ரி)



மானிப்பாய் கியூமெடிக்கா நிறுவத்தினால் நிறுவப்பட்டுள்ள சர்வதேச பாடசாலை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் அப்பாடசாலை மாணவ மாணவியர் வழங்கிய நடன நிகழ்வை படத்தில் காணலாம்.

*(படம்: நவாலி செய்தியாளர்)*

# பருத்தித்துறை - யாழ். இடையே கடுகதி பஸ் சேவை மீள ஆரம்பம்

வடமராட்சி,ஜூலை14

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் கடுகதி பஸ் சேவையை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை பணிமனை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

நெல்லியடி, ஆவரங்கால் ஊடாக தட இலக்கம் 750 இல் நடத்தப்படவுள்ள இச்சேவைக்கு தினமும் இரண்டு பஸ் வண்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் இதே பாதையில் கடுகதி பஸ்சேவை நடத்தப்பட்டு வந்தது. பின்னர் போதிய பஸ்வண்டி இன்மையால் இச்சேவை நிறுத்தப்பட்டது.

அதிவிரைவில் மீண்டும் கடுகதி பஸ் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் ரி.யோ[illegible] தெரிவித்தார். (173-204)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிராம அலுவலருக்கு கணனிப் பயிற்சி

தென்மராட்சி,ஜூலை14

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்களுக்கான ஒருவார கால கணனிப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன. வாரத்தில் தலா பத்து கிராம அலுவலர்களுக்கு கணனிப் பயிற்சிகள் வழங்கப்படும். மாகாண பிராந்திய ஆணையாளர் பணிமனையின் ஏற்பாட்டில் இப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள் என என பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்தார். (204-117)

## பரிசளிப்பு விழா

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் சீதாதேவி சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு வடமராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (173)


### திருமதி கௌரி சிவராஜசுந்தரம்

அவர்களின்

## சேவைநலன் பாராட்டு



அகவை அறுபது காணும் எமது கல்லூரியின் பகுதித் தலைவராகவும் விஞ்ஞான ஆசிரியையுமாக சேவையாற்றி ஓய்வுபெறும் இவ்வேளையில் அவர்தம் சேவைதனைப் பாராட்டுவதுடன், ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்.

\- கல்லூரிச் சமூகம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

(52203)(32.21.11.17)


பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

தருமரெட்ணம் செல்வகுமாரன் பெண் அன்பரசி
(சுப்பிரமணியம் பூரராசா மகள்)
91/11, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல.மணநீக்கம்/591

எதிராக

தருமரெட்ணம் செல்வகுமாரன்
105, 3ஆம் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம்.

எதிராளி

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு ஆனி மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்த போது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி பா.தவபாலன் அவர்களும் பிரசன்னமாயிருக்க வழக்காளியின் சட்டத்தரணி பா.தவபாலன் அவர்கள் இவ் வழக்கு இன்று வழக்கெழு வினாக்கள் பரிசீலனைக்கும் விளக்கத்திற்கும் என தவணையிடப்பட்டிருந்தது என்றும் எதிராளியின் சட்டத்தரணி க.கேசவன் அவர்கள் தனக்கு எதிராளியிடமிருந்து எந்தவிதமான அறிவுறுத்தலும் கிடைக்கவில்லையென்று தெரிவித்திருப்பதால் இன்று எதிராளி மன்றில் சமுகமளிக்காமையையும் கவனத்தில் எடுத்து இன்று இவ் வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு நியமித்து வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த அனுமதிக்கவேண்டுமென்று விண்ணப்பித்ததற்கு அமைய அனுமதியளிக்கப்பட்டு வழக்காளியின் சாட்சிநெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது, வ1 ஆவணம், வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை மன்று வழக்கேட்டுடன் சேர்த்து பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெற தகுதியுடையவர் எனக்கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2005ஆம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் திகதி நிறைவேறிய திருமணப் பதிவை எதிராளி வழக்காளியின் பூரண சம்மதமின்றி கட்டாயத்தின் பேரில் இந்தத் திருமணப் பதிவு செய்யப்பட்டதனால் அதனை இத்தால் வெற்றும் வெறுதிமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

குறித்த திருமணத்தின் நிமித்தம் வழக்காளியிடம் எதிராளி சீதனமாகப் பெற்றுக்கொண்ட பதினைந்து லட்சம் ரூபாவை எதிராளி வழக்காளிக்கு செலுத்தவேண்டுமென்று இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளியால் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படும் செலவுப் பட்டியலை பதிவாளர் வரியீடு செய்து வரும் தொகையை 19.05.2006ஆம் திகதி மன்றின் கட்டளைப்படி செலுத்த வேண்டிய ரூபா ஆயிரத்துடன் சேர்த்து எதிராளி வழக்காளிக்கு செலுத்த வேண்டுமென்று இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் தேசியப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு ஆனி மாதம் 20ஆம் திகதி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி
நீதிமன்றக் கட்டளைப்படி

வரைந்தது
வழக்காளியின் சட்டத்தரணி.

து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(52206)(21.11.17)


### சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மஹோற்சவ விழா (கொடியேற்றம்) 2006

## அழைப்பு



அம்பிகை அடியார்களே!

கொடியேற்றம் நாளை (15.07.2006) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்று மஹோற்சவம் பத்து நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

ஆடிப்பூரம் திருவிளக்குப் பூசை 28.07.2006 வெள்ளிக்கிழமையும் வரலக்ஷ்மி விரதம் 04.08.2006 வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!.

-தர்மகர்த்தா.


## அரசாங்க அறிவித்தல்

### தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2006

1980 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின்படி 2006ஆம் ஆண்டிற்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் பதிவேடுகள் திருத்தம் ஆரம்பமாகி விட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் 2005ஆம் ஆண்டு தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலரால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இடம் | காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பும் அல்லது அவற்றின் பாகங்களும் |
|---|---|
| 01. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் அனைத்தும் |
| 02. பிரதேச செயலகம்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள் |
| 03. மாநகர /நகர/பிரதேச சபை அலுவலகங்கள் | ஒவ்வொரு மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் அடங்கிய பகுதியினுள் வதியும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள் |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்குள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள் |
| 05. ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம் | ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள பிரதேசத்தினுள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள் |

(3) ஏதாவதொரு வாக்கெடுப்பு பிரிவில் ஒரு வாக்காளராகப் பதிவதற்குத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

(4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும் தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் 2006 ஜூலை மாதம் 17ஆம் திகதி முதல் 2006 ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதிவரையும் இவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதியும் அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல.10,
யாழ்ப்பாணம்.

தேர்தல் அலுவலகம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-50193)(21.11.17)

### பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
### CADREP PROGRAMME
### கச்சேரி, முல்லைத்தீவு

## பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தேவையான தகைமைகளினை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் 'அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு' என்னும் முகவரிக்கு 2006.07.21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தயவு செய்து தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

| திட்டமிடல் அலுவலர் (வெற்றிடம் - I) (Planning Officer) | மாவட்ட பொருளாதார மீளுகை அலுவலர் (வெற்றிடம் -I) (District Economic Recovery Officer) |
|---|---|
| **கல்வித்தகைமை அனுபவம்** சமூக விஞ்ஞானம், அபிவிருத்தி, பொருளியல் அதனுடன் தொடர்புடைய பாடங்களில் முதுநிலைப் பட்டப் படிப்பு அல்லது பட்டப்படிப்பு அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் | **கல்வித்தகைமை அனுபவம்** சமூக அபிவிருத்தி கல்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடங்களில் பட்டம் பெற்றிருப்பதுடன், சமூக முகாமைத்துவம் தொடர்பான தொழில் அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். |

**பிரதேச வாழ்வாதார அலுவலர்**
**(வெற்றிடம் - I)**
(Divisional Livelihood Officer)

**கல்வித்தகைமை அனுபவம்:**
சமூக அபிவிருத்தி, கல்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடங்களில் பட்டம் பெற்றிருப்பதுடன், சமூக மட்டத்தில் வேலை செய்த அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்குக் கவர்ச்சிகரமான கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், இச்சேவைக்கென தெரிவுசெய்யப்படும் அலுவலர் இவ்வருட இறுதிவரை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவர். தேவையேற்படின் அவர்களின் பதவிக்காலம் நீடிக்கப்படும். இளைப்பாறிய அரச அலுவலர்களும், தற்போது அரச சேவையிலுள்ள அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம்.

அரச திறைசேரி செயலாளரின் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் -10 இற்கமைவான நிபந்தனைகளுக்கேற்ப இந்நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தில் சுயவிவரத்துடன், உறவினரல்லாத இருவரின் பெயர்களையும் குறிப்பிடல் வேண்டும்.

மேலும் தகவல்கள் தேவைப்படின் கிழமை நாள்களில், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இமெல்டா சுகுமார்,**
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.
07.07.2006

(சி-50194)(21.11.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடையில் தமிழ்ப் பெண் கைதியின் உடல் நிலை மிக மோசமான கட்டத்தில்!

## ஜனாதிபதிக்கு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. கஜேந்திரன் கடிதம்

கொழும்பு, ஜூலை 14

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண் கைதி ஒருவரின் உடல்நிலை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருப்பது ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறையில் உள்ள தமிழ்ப் பெண் கைதியான திருமகள் சித்திரசேனன் (வயது 35) உடல்நிலை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளதால் அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரியிருக்கிறார்.

இதுதொடர்பாக மஹிந்தவுக்குக் கடந்த 7ஆம்திகதி கடிதம் ஒன்றைக் கஜேந்திரன் அனுப்பியுள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டு செப்டெம்பர் 8ஆம் திகதி திருமகள் கைதுசெய்யப்பட்டார். விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர் என்ற சந்தேகத்தின்பேரில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுத்துறையினரின் சித்திரவதைகளினால் அவரது மூளையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த 6 மாதங்களாக அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பெண்ணின் கணவரும் களுத்துறைச் சிறையில் இருப்பதையும் அக்கடிதத்தில் செ. கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# கள்ளநோட்டு அச்சிடும் கும்பல் பாமன்கடையில் சிக்கியது!

கொழும்பு, ஜூலை 14

மாலைதீவு நாட்டு நாணயத்தாளை (கரன்ஸி) கள்ளமாக இலங்கையில் அச்சிட்டு, மாலைதீவுக்கு எடுத்துச்சென்று விநியோகிக்கும் கும்பல் ஒன்றை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கைதுசெய்திருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பாமன்கடைப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட நால்வர் கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் நீதிமன்றில் நீதிவான் அஜித் அனவரட்ண முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் மாலைதீவு நாட்டவரும், இலங்கையரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கள்ள டொலர் நோட்டு அச்சிடுவதிலும் அவர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் எனக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# பிரதமர் ரட்ணசிறியின் எம்.பி. பதவி குறித்த சர்ச்சை உயர்நீதிமன்றின் 5 நீதியரசர்கள் ஆயத்தின் முன்

கொழும்பு, ஜூலை 14

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான சர்ச்சை ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்தின் முன்னால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றம் இவ்வாறு முடிவுசெய்தது. கடந்த பொதுத்தேர்தலையொட்டி ஆளும் கட்சித் தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பாளர்களின் ஒழுங்கில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பெயர் இருக்கவில்லை.

எனினும், பொதுத் தேர்தலின் பின்னர் அவர் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டு எம்.பியானார். பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும் பதவியேற்றார். அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகியமையை அடுத்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராகவும் நியமிக்கப்பட்டார்.

தேசியப்பட்டியலில் வேட்பாளர் பத்திரத்தில் இடம்பெறாத ஒருவர் தேசியப்பட்டியலில் எம்.பியாக நியமிக்கப்பட்டமை தவறு எனத் தெரிவித்து, ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் எம்.பி. பதவி நியமனத்தை ரத்துச் செய்யக்கோரி மாற்றுக் கொள்கைக்கான நிலையம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தது. அந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணக்கு ஏற்றது.

அந்த முடிவை ஆட்சேபித்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க உயர்நீதிமன்றத்தில் விசேட மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த மனு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் பதில் பிரதம நீதியரசர் நிஹால் ஜயசிங்க, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, சலீம் மர்சூக் ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, மேன்முறையீட்டு மனுவின் மனுதாரரான ரட்ணசிறி விக்கிரமநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா இந்த மேன்முறையீட்டு மனுவை ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயிர்நீதிமன்றில் விசாரிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் எதிர்வரும் ஒக்ரோபர் 24ஆம் திகதி ஐந்து நீதியரசர்களின் முன்னால் விசாரணை நடத்தப்பணித்தது. (த)

# லக்மல் கொலை குறித்து கப்டனிடம் விசாரணை

கொழும்பு, ஜூலை 14

கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட சிங்கள ஊடகவியலாளர் லக்மல் சம்பத்தின் கொலை தொடர்பாக இராணுவக் கப்டன் ஒருவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

லக்மல் சம்பத்துக்கு ஏற்கனவே பல தடவைகள் தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டு வந்தது என்றும், அந்த மிரட்டலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே குறித்த இராணுவக் கப்டன் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை14

கொழும்பு உயர்தொழில்நுட்ப நிறுவனம் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமாக் கற்கை நெறிக்கு(HNDE) மாணவர்களை உள்வாங்கிக் கொள்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மூன்று வருடக் கற்கை நெறியான இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் பழைய பாடத்திட்டமெனின் பிரயோக கணிதம், தூயகணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய 4 பாடங்களில் ஒரே தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மூன்று பாடத்திட்டமெனின் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவு திகதியின்போது 23 வயதிற்குக் குறைவானவராக இருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியானவர்கள் ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர், உயர்தொழில்நுட்ப நிறுவனம், மட்டக்குளிய, கொழும்பு -15' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள அறநெறிப் பாடசாலையின் இறுதிப்பரீட்சைக்குத் தகுதியனவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் மேற்பிரிவில் பயில்பவர்களாக இருப்பதுடன், பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலை ஊடாகவே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் அனைத்து இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படுமெனவும் ஓகஸ்ட் 4ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 'பரீட்சை ஆணையாளர் நாயகம்' ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்தரமுல்ல' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)

# பேசாலைத் தாக்குதல் தொடர்பாக விசேட பொலிஸ்குழு விசாரணை

மன்னார், ஜூலை 14

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 12 பேர் கொண்ட உயர்மட்ட பொலிஸ் குழுவொன்று பேசாலை தேவாலயத் தாக்குதல் தொடர்பான வாக்குமூல விசாரணைகளை மேற்கொள்வதற்கென மன்னாருக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உயர் மட்டக்குழுவில் 5 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும், 6 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் அடங்கியிருந்தனர். கடந்த திங்கட்கிழமை மன்னார் வந்த இந்தக் குழுவினர் அங்கு சேதமடைந்த இடங்களைப் பார்வையிட்டதுடன், அங்குள்ள அகதிகளையும் சந்தித்துப் பேசினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதன்பின்னர் தேவாலயத்தின் மீதான தாக்குதலை நேரில் கண்ட 15 பேரை மன்னார் பொலிஸ்நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தனர்.

இரண்டாம் கட்ட வாக்குமூலங்களைப் பதிவுசெய்யவும் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

கடந்த மாதம் 17ஆம் திகதி பேசாலை தேவாலயத்தின்மீது இனந்தெரியாத ஆயுததாரிகளால் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் மூதாட்டி ஒருவர் கொல்லப்பட்டதுடன் 40 பேர் காயமடைந்தமை தெரிந்ததே. (த)

## தெய்வீகஸ்தலங்களில்



உரும்பிராய் கிழக்கு சிவபூதநாதேஸ்வர ஆலயத் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. சிவபூத நாதேஸ்வரசுவாமிகள் தேரில் எழுந்தருளி திருவீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். (204)

# மனிதப்பிறவியின் மகத்துவம்

## ஞானக்கதிர்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருதப்படும் மானிடப்பிறவி மகத்தான ஒன்று. இந்தப் பிறவி மிகவும் புனிதம் வாய்ந்தது. மனிதப் பிறவி எடுத்த நாங்கள் அதன் புனிதத்தையும் மகத்துவத்தையும் உணர்ந்து செயற்படவேண்டும். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ சொல்லவே முடியாது.

மனிதன் முதலில் மனிதனாக வாழப்பழக வேண்டும். மனித உருவில் இருந்துகொண்டு மிருகமாக வாழ்தல் கூடவே கூடாது. இன்றைய காலகட்டத்தில் மனிதன் பல்வேறு விதமான பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கின்றான். விலங்குகளிடமும் பறவைகளிடமும் மனிதன் கற்றுக்கொள்ளவேண்டிய நல்ல பழக்கங்கள் பல உள்ளன.

காகம் ஓர் உணவுப்பொருள் கிடைத்தால் ஒருபோதும் தனியாக உண்ணாது. காகங்கள் உணவைக் கண்டவுடனே கரைந்து தன் இனத்தை அழைக்கும். அது கேட்டுப் பல காகங்கள் பறந்து வரும். அதன் பிற்பாடுதான் கிடைத்த உணவை ஒன்றாக சேர்ந்து உண்ண ஆரம்பிக்கும். இந்தச் சிறப்பான குணாம்சத்தைக் கொண்டிருக்கின்றது காகம். 'ஒற்றுமையே பலம்' என்பதற்கு இலக்கணமாக விளங்குகின்றது காகம். ஆனால், மனிதன்?

எறும்புக்கூட்டத்தைப் பாருங்கள். எவ்வளவு சுறுசுறுப்புடன் ஒற்றுமையாகச் செயற்படுகின்றன. எறும்பூரக் கற்குழியும் என்பார்கள். அடிக்கு மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்றபடி இடைவிடாத முயற்சி எப்போதும் வெற்றியையே அளிக்கும்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ற ஔவையார் அவரோடு ஒரு சேர இணங்கி இருப்பதனால் நன்மையே விளையும் என்கின்றார். வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த அருந்தலைவனாகத் திகழும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபாடு செய்வது பிரதான கடமையாகும். அதுவே எமது சைவசமயத்தின் சிவப்பணியுமாகும்.

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்ற ஔவையின் கூற்றுக்கு [illegible] யே கிடையாது. கோயில் இல்லா ஊரிற் குடியிருக்கவே வேண்டாம். எனவே, நாம் ஆலய வழிபாடு செய்தால்தான் ஆன்ம ஈடேற்றம் கிடைக்கும். எல்லாம்வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களை வழிபடுவதற்கு நாம் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்கவேண்டும். எமது வாழ்நாளில் நல்லனவற்றைச் செய்து நல்லவர்களோடு பழகி நல்லவர்களோடு வாழ்ந்து நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டாலே நல்லது. அதுவே நன்மை பயக்கும். அவ்வாறு நல்வாழ்வு நமக்கு அமையவேண்டுமாயின் நாம் நாட்டில் நல்லனவற்றைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் ஒருவரைப் பார்த்து "அவனுக்கென்ன கொடுத்துவைத்தவன். அனுபவிக்கிறான்" என்று கூறுகிறோமல்லவா! அதன் தாற்பரியம் என்ன? முற்பிறவியிலே நல்ல காரியங்களைச் செய்தால் இப்பிறவியல் நன்மை கிடைக்கும். நல்ல செயல்களைச் செய்யாமல் காலங்கழித்தால் அதைவிடக் கொடுமை வேறில்லை. ஐந்தறவு படைத்த மிருகங்களுக்கும் ஆறறிவு கொண்ட மனிதர்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கவேண்டும். பார்த்தால் மனித உருவம். ஆனால், வாழ்க்கையோ மிருகத்தைவிட மோசமானதாக இருக்கும். இது எவ்வளவு அறிவீனம்.

இறைவனுக்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்களான பால், தயிர், நெய், கோசலம், கோமயம் முதலானவற்றைத் தருவது பசு. அந்தப் பசு ஒரு சாதுவான மிருகம். அதை நாம் வெட்டி உண்பது மிகவும் தவறான ஒரு செயல். பசுவதையைப் போல ஒரு கீழ்த்தனமான செயல் வேறு இல்லை என்றே சொல்லலாம்.

ஓர் உயிரையும் கொல்லாமல், புலால் உண்ணாமல் எவன் ஜீவிக்கிறானோ அவனை எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்பது வள்ளுவர் கூற்று.

உலகில் அன்பு செலுத்தினால்தான் உண்மையாக வாழமுடியும். நாம் உண்மையாக வாழ்வதற்கு அன்பு செலுத்தவேண்டும். பிற உயிர்களிடம் அன்பு காட்டும்போது அவையும் நம்மிடம் நேசம் வைக்கின்றன. அதனால் பாசமும் நேசமும் உண்டாகின்றது. அன்பே சிவம்; ஆதலால் அந்தப் பக்தி இறைவனிடம் செலுத்தப்படும்போது ஆன்ம ஈடேற்றம் கிடைக்கிறது.

(நன்றி: ஞானச்சுடர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்டியல் உடைத்துப் பணம் திருட்டு

வலி.தென்மேற்கு,14

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலையிலுள்ள புனித அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயத்தின் உண்டியல் பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. ஆலய கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் பெட்டியை எடுத்து சென்றுதிருடர் அருகிலுள்ள காணியில் வைத்து உடைத்து பணத்தை எடுத்து விட்டு பெட்டியை அவ்விடத்தில் வீசிவிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை14

தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சிக் கண்காட்சி தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் முன்பள்ளி ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலய முன்பள்ளி வலயக் கல்விப் பணிப்பாளர் கே. வரதராஜமூர்த்தி கேட்டுள்ளார். (204)


**G.A.Q பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

* A/L கலை, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
* இப்பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து கொடுக்கப்படும்.
* புதிய பிரிவு விரிவுரைகள் ஆரம்பம்: 05.08.2006 (8 மணி)

விவரங்கட்கு:

**S.அருள்நங்கை**

புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (52175) (39,11,15,26)

**IIS COMPUTER COURSES**

**A/L 2006**

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை

IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

**New Batches Start on :**

Batch 1 [ Weekday ] : 23.06.2006
Batch 2 [ Weekend ] : 01.07. 2006
Batch 3 [ Weekday ] : 10.07. 2006
Batch 4 [ Weekend ] : 23.07. 2006
at 09.30 A.M.

**Diploma Courses**

- Diploma in MS Office
- Diploma in Internet Technology
- Diploma in Computer Programming
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hardware Technology
- Diploma in Eng. Drawing & AutoCAD

**சிறப்புக் கட்டணச் சலுகையில் கணனிக் கற்கைநெறிகள் சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் !!**

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)**

# 100, Clock Tower Road, Jaffna

Tel : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

**கலாலயா பயிற்சியகம்**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித ஒருமாத / 3மாத பயிற்சிகள்

* கேக் ஐஸிங் * கூந்தல் அலங்காரம் * உணவு தயாரித்தல் * FABRIC PAINTING
* பூ வேலை * கைவேலை * FACIAL * சாறி பிளவுஸ், சல்வார், பஞ்சாபி தைத்தல்
* புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள்

இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன. புதிதாகச் சேர விரும்பும் மாணவிகள் தொடர்புகொள்ளவும்.

மேலும் விவரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பிற்பகல் 2 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

(சி/50181) (24-19-14) - பதிவாளர்.

**இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து**

சுன்னாகத்தில் வசிக்கும்
திரு.திருமதி
**சிவருபன் ஜெயலக்ஷ்மி**
தம்பதியரின் செல்வப்
புதல்வன்
**ஜெயருக்ஷன்**
தனது இரண்டாவது
பிறந்தநாளை
இன்று (14.07.2006)
வெள்ளிக்கிழமை தனது
இல்லத்தில் வெகு சிறப்பாகக்
கொண்டாடுகின்றார்.
ருக்ஷன் குட்டி சகல
செல்வமும் பெற்று சீருடனும்
சிறப்புடனும் தெய்வ
அருளோடும் பார் போற்ற
நீடூழி வாழ வேண்டும் என
வாழ்த்துவோர்.




**ரூபன், கவி.**
(அப்பா, அம்மா).

(51968) (39)

**ADMISSIONS OPEN**

**A/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே ! அடுத்து என்ன ?

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான வாய்ப்பு
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் கௌரவமான வேலைவாய்ப்பு
- சொந்த மண்ணில் பெற்றோரின் அரவணைப்பில் உயர் கல்வி

பெற்றோர்களே !!

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த ஓர் எதிர்காலத்திற்கான முதலீடு HND

BTEC HND

World Class Qualifications

Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

பதிவுகளுக்கு நீங்கள் முந்திக்கொள்ளுங்கள்

edexcel INTERNATIONAL
Approved Training Centre

**IIS CITY CAMPUS**

# 200, Sivan Pannai Road, Jaffna

TP No. : 021 222 8060 Fax: 021 222 6933 Email: iiscc@sltnet.lk

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777-222422

**Diploma in Computerized Accounting**

**Accpac+QuickBooks Premier+MYOB**

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

**Tally Accounting Package** வகுப்புக்கள் ஆரம்பம்:

புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

Course Contents
- Fundamentals of IT, Manual Accounting, Financial Accounting,
- Cost Accounting, Stock Control,
- Taxation (Including VAT),
- Bank Reconciliation, Budgeting,
- Fore Casting, Business Planing

Weekend Batch :
15/07/2006 11.30am
16/07/2006 02.30pm

Week Day Batch :
21/07/2006
24/07/2006 08.30am


**6 ஆவது வருட நினைவஞ்சலி**

| இலங்கையில் மலர்வு | இந்தியாவில் உதிர்வு |
|---|---|
| 05 . 12 . 1980 | 20 . 06 . 2000 |



**செல்வன் பாலசுப்பிரமணியம் கோபிநாத்**

(யா/இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு- விஞ்ஞானப் பிரிவு)

திதி: சதுர்த்தி 14.07.2006

சிறுபாவம் செய்தவர்
சிறுவயதில் இறைவனடி சேர்வர்
ஆனால் உம்மை இழக்க நாம்
பெரும் பாவம் செய்து விட்டோம்
ஐந்தாண்டு காலமாக உன் காலடி ஓசையை
கேட்டுவரும் எமக்கு உன் காட்சியை
விரைவில் தா ஐயா !

தகவல்:
ஐ.பாலசுப்பிரமணியம்,
வேலணை-4.

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

(52194)(39.11.15.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்து நேரிடும் வேளைகளில் தமிழ்ப் படைகள் சிலிர்த்து எழும்!

## விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்



கிளிநொச்சி,ஜூலை14

தமிழ்ப் படைகளின் இயல்பு பாரிய ஆபத்து வரும்போது சிலிர்த்து எழும். இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்.

தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு இயந்திரங்களில் ஒன்றுதான் அரச படைகள். அந்த அரச படைகள் தங்களுக்கென ஒரு நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளன. அதாவது தீர்வுத் திட்டமானது சிங்களவருக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்பதில் தங்களின் பங்களிப்புக் குறித்து தெளிவாக இருக்கின்றனர்.

ஒப்பந்தங்களோ அல்லது வெளிநாடுகளுக்கு சிறிலங்கா அரசு கொடுக்கின்ற வாக்குறுதிகளோ இந்த அரச படைகளின் நிகழ்ச்சி நிரலைப் பாதித்ததாகத் தெரியவில்லை.

பாதுகாப்புக்கு வந்த படைகள் என்று சொல்லிக்கொண்ட படையினர் தங்களுக்கான பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி மக்களை இடம்பெயர வைத்துள்ளனர். அத்துடன் அவர்களால் மேற்கொள்ளப்படும் படுகொலைகளும் அச்சுறுத்தல்களும் தொடர்ந்தவாறே உள்ளன. இந்தச் சூழ்நிலையை அதிகரிக்கவே படையினர் விரும்புகின்றனர்.

ஆகவே, ஒப்பந்தங்களும் பேச்சுவார்த்தைகளும் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு இயந்திரத்தில் எதுவித மாற்றத்தையும் உருவாக்கவில்லை.

ஒரு படையானது தனது இலக்குகளை அடைவதற்கு பல உத்திகளையும் பல உள்ளோட்டமான வேலைத் திட்டங்களையும் கொண்டிருக்கும்.

பாரிய படை நடவடிக்கைகளைச் செய்வதற்கு அந்தப் படையினரிடம் ஒரு உயர்மட்ட ஒழுக்க நியமம், உயர்மட்ட மன உறுதி நியமம் எல்லாம் தேவைப்படும். எமது தேசியத் தலைவர் அவர்கள் வடிவமைத்திருக்கின்ற படைத்துறை நிர்வாக முறையானது அண்மைக்கால உலகில் வேறுஎங்கும் ஒப்பிடமுடியாத அளவு, உயர்ந்த அளவு படைத்துறை ஒழுக்க நியமங்களைக் கொண்டது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறோம்.

அந்த ஒழுக்க நியமங்களின் மூலமாகப் பெறப்படுகின்ற படையின் மன உறுதியை ஒப்பிடுகையில் சிறிலங்காப் படையினர் கீழேதான் உள்ளனர். தன்னுடைய தாயகம் என்று உணரப்படாத இடத்திலே நின்று போராடுகின்ற போது அரச படைகள் மன விரக்தி அடைவதும் படுகொலைகள் - பாலியல் வல்லுறவுகள் போன்ற கொடூரமான செயல்களைச் செய்வதுமாக உள்ளனர்.

படைத் துறையினரது புலனாய்வுப் பிரிவினர் மற்றும் மேலதிகார மட்டத்தினர் தமிழர்களை ஒடுக்குவதற்கும் தமிழர்களின் மனங்களிலே பீதியை ஏற்படுத்தவும் தமிழர்களின் தாயக வேட்கையை தணிய வைப்பதற்கான அச்சுறுத்தல்களைச் செய்வதற்காகவும் ஒரு பகுதி வேலைகளைச் செய்துகொண்டு வருகின்றனர்.

அரச இராணுவ இயந்திரம் வெளிப்படையாகச் செய்கின்ற படுகொலைகளது அளவுக்கு படுகொலைகளின் பின்னால் தங்களது இலக்கை அடைவதற்கு செய்யப்படுகின்ற நகர்வுகள் வெளியே பேசப்படுவதில்லை - என்றார்.

## உரக்களஞ்சியம் இல்லை: விவசாயிகள் இதனால் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஜூலை14

ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்தில் உரக்களஞ்சியம் இல்லாமையால் உரத்தை சேமித்து வைத்து விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் உரத்தைப் பெற வேண்டுமாயின் 3, 4 மைல் தூரத்திற்கு அப்பால் சென்றே உரத்தைப் பெறவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் மழை நேரங்களில் உரத்தைப் பாதுகாப்பாக வைக்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்திற்கென ஒரு உரக்களஞ்சியம் அமைக்க உரியவர்கள் ஆவண செய்ய வேண்டுமென விவசாயிகள் கேட்டுள்ளனர்.

(203-341)

## மணல் அகழப்படுவதால் பயிர்ச்செய்கை பாதிப்பு

ஒட்டுசுட்டான்,ஜூலை14

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிலுள்ள மன்னாகண்டல் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் மண் அகழ்வு நடைபெற்று வருவதால் பயிர்ச்செய்கை நிலங்கள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி கமக்கார அமைப்புப் பிரதிநிதி பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

உழவு இயந்திரங்கள் மூலம் மணல்கள் ஏற்றுவதை உரியவர்களுக்கு அறிவித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(203-341)

# அடிக்கடி மின்சாரம் துண்டிப்பு; அலுவலர்களும், மக்களும் பாதிப்பு!

பரந்தன்,ஜூலை14

கிளிநொச்சி மாவட்டத்தில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படும் நிலைமை தோன்றியுள்ளதால் பல்வேறு வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக மக்களும் அலுவலர்களும் பெருங்கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கை மின்சார சபையால் கிளிநொச்சி நகரப் பகுதிக்கு மட்டுமே தற்போது மின் வழங்கப்பட்டுவருகின்றது.

இவ்வாறு குறிப்பிட்ட இடத்திற்கு வழங்கப்படும் மின்சாரமும் அடிக்கடி இடைநிறுத்தப்படுவதால் அரச அலுவலகம் மற்றும் பொது நிறுவன வேலைகள் ஸ்தம்பிதம் அடைகின்றது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் ஒழுங்காக வழங்கப்படாமையால் வேலைகள் ஸ்தம்பிதமடைவதுடன் தாம் பெரும் சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர் என அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மின்சார சபையினரிடம் கருத்துக் கேட்டபோது:-

மின்சார சபையிடம் உள்ள இரண்டு பழைமை வாய்ந்த மின்பிறப்பாக்கிகள் மூலமே மின் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது ஒரு மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளமையால் ஒரு மின்பிறப்பாக்கி மூலமே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாகவே அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக மின்சார சபையின் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய மின்பிறப்பாக்கிகள் அவர்களால் வழங்கப்படும் வரை இந்நிலையே காணப்படுமென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, உரியவர்கள் விரைவில் இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (203-352)

# கமக்காரர் அட்டைகளைப் புதுப்பிக்குமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான்,ஜூலை14

ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஊடாக விவசாய உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளமையால் விவசாயிகளை கமக்காரர் அறிமுக அட்டைகளை நாளை சனிக்கிழமைக்கு முன்னர் புதுப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.


விவசாயிகள் தங்கள் பகுதிகளில் உள்ள கமக்காரர் அமைப்பு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு பிரதேச செயலகம் ஆகியவற்றுடன் தொடர்கொண்டு தங்களின் கமக்கார அட்டைகளைப் புதுப்பிக்கலாம் எனவும் -

இதுவரை கமக்காரர் அட்டைகள் பெறாதோரும் விண்ணப்பம் செய்து கமக்காரர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் முல்லைத்தீவு தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவன மாவட்ட பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

(203-341)



*மேஜர் காந்தரூபனின் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா சிறப்புரையாற்றுவதையும் காந்தரூபன் அறிவுச் சோலை மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.*




# மருத்துவர் இடமாற்றத்துக்கு அக்கராயன் மக்கள் எதிர்ப்பு

அக்கராயன்,ஜூலை14

கிளிநொச்சி அக்கராயன் சுற்றயல் கூறு மருத்துவமனையில் பணியாற்றிவரும் மருத்துவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டமைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அக்கராயன் மருத்துவமனையில் பணியாற்றிவந்த இரு மருத்துவர்களுக்கு யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டதையடுத்து நெருக்கடியான காலகட்டத்தில் அக்கராயன் பிரதேச மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இரவு பகல் பாராது பணியாற்றிய மருத்துவருக்கு மாற்றம் வழங்கக் கூடாது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மருத்துவரின் இடமாற்றத்திற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர், கிளிநொச்சி அரச அதிபர், தமிழீழ அரசியல் துறையினர் ஆகியோருக்கு மகஜர்களையும் கையளித்துள்ளனர்.

இவர்கள் மகஜர் வழங்கியதையடுத்து மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படுமென்று அரச அதிபர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் சுற்றயல்கூறு மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் பணிபுரிய வேண்டிய நிலையில் கடந்த காலங்களில் எவரும் பணியில் இல்லாத நிலையிலேயே தற்போது கடமை புரியும் மருத்துவருக்கு இட மாற்றம் வழங்கப்பட்டது.

இந்த வைத்தியருக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்துக்கே மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

(203-420)

# புலிகளின் ஒவ்வொரு கட்டமைப்பும் தமிழர் சுதந்திரமாக வாழ்வதற்கே

## காந்தரூபன் அறிவுச்சோலை நிகழ்வில் பரா

கிளிநொச்சி,ஜூலை14

மேஜர் காந்தரூபனின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரை தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை கேணல் விதுஷா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து காந்தரூபன் அறிவுச் சோலைக் கொடியை மாணவர் யூட் ஏற்றிவைக்க கடற்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா ஈகச் சுடர் ஏற்றிவைத்தார். மலர்மாலையினை கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மேலாளர் மோகன் அணிவித்தார்.

இந்நிகழ்வில் நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா சிறப்புரையாற்றுகையில்:-

கல்வி ரீதியாக சிறார்களை வளம்படுத்தி தமிழீழத்தின் அறிவுமான்களாக அவர்களை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையில் செஞ்சோலை, அறிவுச்சோலை என இரண்டாகப் பிரித்து தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டுக் கொண்டுள்ளார். கல்வி ரீதியாக இம் மாணவர்கள் வளர்ச்சியைக் கண்டுள்ளனர். பல்கலைக்கழகத்திற்குக் கூட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த நவீனத்துவங்களை உள்வாங்க வேண்டும். இதன் மூலம் எங்களை நாங்கள் வளர்த்துக்கொள்ள முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு கட்டமைப்பும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகவும் உரிமைகளைப் பெறுவதற்காகவும் அமைக்கப்படுகிறது.

சட்டத்தையும் ஒழுங்கையும் சிறந்த முறையில் நாம் பேணுவதன் ஊடாக சமத்துவத்தையும் மனித உரிமைகளையும் பெற்றெடுக்க முடியும்.

சிறுவர்களை நாம் போராட்டத்தில் இணைக்கின்றோம் என்று கூறிய சர்வதேசத்தின் பார்வைகள் இப்போது மாற்றமடைய வேண்டும். காந்தரூபன் அறிவுச் சோலையையும் செஞ்சோலையையும் வெளிநாட்டவர்கள் பார்க்கின்ற போது வியப்படைகின்றனர் - என்றார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து காந்தரூபன் அறிவுச் சோலை மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெற்றன.

(203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில தினப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை14

தென்மராட்சி கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் நாளையும் நாளைமறு தினமும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் என்பவற்றில் நடைபெறவுள்ளன என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் முன்னர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு தற்போது இடமாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (204)

## வலிகாமம் வலய ஆசிரியர்களுக்கு அடுத்த வாரம் பதவியுயர்வுக் கடிதம்

வலி.வடக்கு,ஜூலை14

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுக் கடிதம் அடுத்த வாரம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இப்பதவி உயர்வுகளைப் பெறவுள்ளனர்.

கடந்த ஆண்டில் பதவி உயர்வுகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு பட்டியல் அனுப்பப்பட்டிருந்தது.

உரிய நியமனக் கடிதங்கள் வடக்கு - கிழக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படுவதாக இருந்த போதிலும் இறுதியில் இந்நடவடிக்கை கைவிடப்பட்டு உரிய கோவைகள் மீண்டும் உரிய கல்வி வலயங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தற்போது வலிகாமம் கல்வி வலய ஊழியர்கள் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மேற்கொண்ட முயற்சி காரணமாகப் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கான கடிதங்கள் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளன என்று வலிகாமம் கல்வி வலய அலுவலக வட்டாரங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. (86)

## நல்லூர் பிரதேச சபையின் மத்தியஸ்தர்கள்தின விழா

வலி.வடக்கு,ஜூலை14

நல்லூர் மத்தியஸ்தர்கள் சபையின் மத்தியஸ்தர்கள் தினவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மத்தியஸ்தர் சபைத் தலைவர் முத்தையா யோகராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், இளைப்பாறிய மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு, யாழ். மாவட்ட மத்தியஸ்தர் சபையின் இணைப்பாளர் க.கணேசராசா, நல்லூர் பிரதேச கிராம அலுவலர் சி.இலட்சுமிகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (204-86)

### பொதுக்கூட்டம்

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்படத்தில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதேச கலைஞர்களையும் கலை ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204-70)

### கலந்துரையாடல்கள்

வடமராட்சி வலய உளவளத் துறை நட்புதவியாளர்களுக்கான பயிற்சியும் கலந்துரையாடலும் நாளைமறு தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த சகல உளவளத்துணையாளர்களையும் நட்புதவியாளர் களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(204-173)

* * *

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி தொகுதி ஆதரவாளர்களுக்கான கருத்தரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இராமலிங்கம் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதால் ஆதரவாளர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கேட்டுள்ளார். (204-117)

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படும் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் எஸ். அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும். இவ்வார நிகழ்வில் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். (204-173)


உ

நீர்வேலி

திருமுருகன்

★ திருமண மண்டபம் ★பல்பொருள் அங்காடி

திறப்புவிழா அழைப்பு



இடம்:
கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி, நீர்வேலி

காலம்:
16.07.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

தலைவர்:
'சிவத்தமிழ்ச் சொல்லழகர்' ச.லலீசன்
(ஆசிரியர், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி)

அருளாசி வழங்குநர்:
சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள்
(தலைவர், இந்துக் குருமார் ஒன்றியம்)
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்)

பிரதம விருந்தினர்:
திரு.A.M.A.குபேரகுலேந்திரன்
(முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.C.A.மோகன்றாஸ்
(பிரதேச செயலாளர், கோப்பாய்)
திரு.த.நடராசா
(செயலாளர், வலி.கிழக்குப் பிரதேச சபை)
திரு.சு.சண்முகவடிவேல்
(கிராம அலுவலர், நீர்வேலி)
திரு.இ.குணநாதன்
(அதிபர், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)

வாழ்த்துரைகள்:
'நீர்வைமணி' சிவஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள்
திரு.ப.கணேசலிங்கம்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
திரு.த.பிரதீஸ்வரன்
(அபிவிருத்தி உதவியாளர்,
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்)
செல்வி சீ.மகிந்தினி
(அபிவிருத்தி உதவியாளர்,
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்)

சிறப்புநூல் வெளியீடு
நூல்: அருள்மணம் கமழும் திருமணச் சிறப்புகள்
தொகுப்பாசிரியர்: நீர்வைமணி
நூல் ஆய்வுரை: திரு.இ.துரைஙங்கரசு
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சங்கானை)
நன்றியுரை: திரு.பா.வசந்தன்

சிறப்பு நிகழ்வுகளாக நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை, நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாகக் வேண்டுகிறோம்.

'திருமுருகன் செட்டியார்'
ந.சிவசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி, நீர்வேலி.
T.P.: 021 4591455 (52201) (24-11-17)



31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

அமரர்
குட்டித்தம்பி
பொன்னம்பலம்
(பிள்ளையார்)

தோற்றம் 01★07★1937 மறைவு 14★06★2006



மனிதருள் மாணிக்கமாய் விளங்கி
புனிதமான வாழ்க்கை வாழ்ந்து
அருமையான மக்களைப் பெற்று
நேர்மைக்கு இலக்கணமாய்த் திகழ்ந்து
நேரிய வழியை எமக்குக் காட்டி
மீளாத் துயில்தான் கொண்டீர்களோ அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

14-06-2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்தும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (14-07-2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
T.P.: 0776747255 (52218) (24-11-17)

- குடும்பத்தினர்.



## Invitation for Bids (IFB)

Save the Children in Sri Lanka

**Tsunami Affected School Building Construction - Jaffna District**

1. The Managing Director, Resources Development Consultants Ltd on behalf of Save the Children in Sri Lanka, 58A, Horton Place, Colombo - 07, shall receive sealed Tenders from eligible Construction Contractors for the construction of two storey School Buildings in the following Schools.
   (1) J/Thondaimanaru M.V.
   (2) J/Puttalai M.V.
   (3) J/Shanthoddam M.V.
2. All bidders should have been registered with the Institute for Construction Training and Development (ICTAD), under thr grade and specialty given below and shall hold a valid membership of the National Construction Association of Sri Lanka (NCASL). Tender documents will be issued only to canidates who provide proof of their registration.
   (i) ICTAD Registration Required: Grade: M.6 or above
   (ii) Specialty : Building construction
3. The Bid documents for the above services could be obtained from the **Engineer, Save the.Children in Sri Lanka, Jaffna Office, 146, Temple Road, Nallur,** up to 12.00 hrs on **24/07/2006** on payment of a non refundable Bid fee of Rupees 2000/=
4. Sealed completed tender Document marked on cover as school Building Construction. Save the Children in Sri Lanka, Jaffna Office. Deadline for submission of bids shall be 12.00 hrs on 28/07/2006.
5. For further details or clarifications, bidder may contact Eng. **Mr. Sivasubramaniam** Save the Children in SriLanka, Jaffna, Telephone no. 021 222 5078
6. This Contract is exempted from VAT.

**Managing Director ,**
**Resources Development Consultants Ltd,**
**No.55-2/1, Galle Road,**
**Colombo 3.**

(C/50200)(32)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான் விமான நிலையம் மீது இஸ்ரேல் தொடர் குண்டுவீச்சு!

## ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் செயலுக்குப் பதிலடி

பெய்ரூட்,ஜூலை14

லெபனானின் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்று குறைந்தது மூன்று ரொக்கெட் தாக்குதல்களை நடத்தின. இதனால் குறைந்தது இரு விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டன அல்லது வேறு பாதையில் திருப்பப்பட்டன.

காஸா நகரில் பலஸ்தீன வெளிநாட்டமைச்சின் மீது குண்டு வீசி தாக்கி அழிவுகள் ஏற்படுத்தியதன் பின்னர் பெய்ரூட் விமான நிலையத்தின் மீதான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காஸா நகர் மீதான தாக்குதலில் பரவலாக சேதம் ஏற்படுத்தப்பட்டதுடன் 13 பேரும் காயங்களுக்குள்ளாக்கப்பட்டனர்.

கடந்த பல இரவுகளில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல்களில் காஸா நகர் மீதான இரண்டாவது இரவு தாக்குதலாகும் இது. புதன்கிழமை இரவு ஹமாஸ் தலைவர்கள் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த வீட்டின் மீது நடத்தப் பட்ட தாக்குதலில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த 9 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

ஜூன் மாத இறுதியில் இஸ்ரேலிய படை வீரர் கிலாட் ஷாவிட் என்பவர் பலஸ்தீன தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதற்காகவும் அவரை விடுதலை செய்யும்படி அழுத்தம் கொடுப்பதற்காகவும் காஸா மீது இஸ்ரேல் கடும் இராணுவ நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இந்தக் கடத்தலுக்கு தாங்களே பொறுப்பு என்று ஹமாஸ் உரிமைகொண்டாடியிருப்பதன் காரணமாக எகுட் ஒல்மேர்டின் படைகள் ஹமாஸ் உறுப்பினர்கள் மீதே கண்வைத்துள்ளன. அவ்வமைப்பின் தலைவர் பலஸ்தீன வெளிநாட்டமைச்சராக இருந்து வருகிறார்.

இதேவேளை- இரு இஸ்ரேலிய படையினர் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதையடுத்து எழுந்த புதிய திருப்பம் ஒன்றில் இஸ்ரேலிய தரை மற்றும் விமானப் படையினர் தென் லெபனானுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளன. எல்லைப் புறச் சண்டையில் 8 படையினர் கொல்லப் பட்டதாகத் தெரிகின்றது. லெபனான் அரசின் செயற்பாடு ஒரு யுத்த நடவடிக்கையென உல்மோர்ட் அறிவித்துள்ளார்.

ஆனால், லெபனான் பிரதம மந்திரி பாவுத் சினியோரா கூறுகையில், சர்வதேச எல்லையில் என்ன நடந்தது என்பது லெபனான் அரசுக்குத் தெரியாது;அதற்கு பொறுப்பெடுக்கவும் முடியாது; அதை அங்கீகரிக்கவுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய சிறையில் வைக்கப்பட்டுள்ள தங்கள் உறுப்பினர்கள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும். கடத்தப்பட்டவர்களை விடுவிப்பதற்காக ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா ஆகிய இரு அமைப்புகளும் நிபந்தனை விதித்துள்ளன. கடத்தப்பட்ட வீரர்கள் அனைவரும் உயிருடன் இருப்பதாகக் கருதப்படுகின்றது. படையினர் கடத்தப்பட்டதையும் இஸ்ரேலியரின் இராணுவ நடவடிக்கையையும் ஐ.நா. செயலாளர் நாயகம் கண்டித்துள்ளார். (ப)

## சிறையில் சதாம் உண்ணாநோன்பை தொடர்கிறார்

பக்தாத்,ஜூலை14

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மற்றும் அவருடன் சிறையிலிருக்கும் 3 பேர் ஒன்றிணைந்து நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அவரது சகோதரர் உட்பட 7 பேர் மீது பக்தாத் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வரு கிறது. 148 ஷியா முஸ்லிம்களைக் கொன்று குவித்ததாகத் தொடரப்பட்ட இந்த வழக்கு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. சட்டத் தரணிகள் வாதம் தற்போது நடைபெற்று வருகிறது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

இந்தநிலையில் சதாம் ஹுசைன் மற்றும் 3 பேர் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். 8ஆவது நாளாக நேற்றும் இந்த உண்ணாவிரதம் நீடிக்கிறது.

சதாம் ஹுசைன் சட்டத்தரணிகள் 3 பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்து இந்த உண்ணாவிரதம் நடைபெறுகிறது. (202)

## அசே மாகாணத்திற்கு அதிக சுயாட்சி வழங்க இந்தோனேஷிய நாடாளுமன்றம் அங்கீகாரம்

இந்தோனேஷியா, ஜூலை14

இந்தோனேஷியாவின் அசே மாகாணத்திற்கு அதிக சுயாட்சி வழங்கும் புதிய சட்டமொன்றை இந்தோனேஷிய நாடாளுமன்றம் உருவாக்கியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இச் சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தோனேஷிய அரசிற்கும் முன்னாள் பிரிவினைவாத அமைப்பான சுதந்திர அசே இயக்கத்திற்கும் இடையில் கடந்த வருடம் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் விளைவாக இப் புதிய சட்டம் உருவாக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டுஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையானது அசேயில் 30 வருடங்களாக நடைபெற்றுவந்த போரை முடிவிற்குக் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (202)

## பூமிக்கு ஆபத்தை விளைவிக்கும் விண்கற்களில் மேலும் ஒன்று!

நியூயோர்க்,ஜூலை14

பூமிக்கு 'ஆபத்தை உண்டாக்கக்கூடிய வாய்ப்புள்ள விண்கல்' பட்டியலில் கடந்த 3ஆம் திகதி பூமிக்கு அண்மையாகக் கடந்து சென்ற ஹிட்ச் ஹைக்கரும் சேர்க்கப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து சுமார் 4 லட்சம் கிலோ மீற்றரில் ஹிட்ச் ஹைக்கர் விண்கல் கடந்த 3 ஆம் திகதி பூமியைக் கடந்து சென்றது. பூமிக்கும் ஏனைய கோள்களுக்குமிடையிலான தூரத்தை ஒப்பிடும்போது பூமிக்கு மிக அண்மையில் இந்த விண்கல் கடந்து சென்றதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பூமிக்கு ஆபத்தை உண்டாக்கக்கூடிய வாய்ப்புள்ள விண்கல் பட்டியலில் இதுவரை 783 விண்கற்கள் இடம்பெற்றுள்ளன. சிறியதும் பெரியதுமான இந்த விண்கற்கள் பூமியின் மீது மோத வாய்ப்பு உள்ளதா? என்பது குறித்து விஞ்ஞானிகள் தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்றனர். எதிர்காலத்தில் விண்கல் ஒன்றினால் பூமிக்கு ஆபத்து ஏற்படும்போல் தோன்றினால் பூமியைக் காப்பாற்றுவதற்கான பல திட்டங்கள் குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. (202)

### முருகன், நளினி உடல்நிலை பாதிப்பு!

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையிலிருக்கும் முருகன் நளினி தம்பதியின் தொடர் உண்ணாவிரதத்தால் இருவரது உடல்நிலையும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தமது மகள் மேகராவிற்கு இந்திய மத்திய அரசு விசா வழங்கக்கோரி இருவரும் உண்ணாவிரதம் இருந்து தண்ணீர் மட்டுமே குடித்து வந்தனர்.

உண்ணாவிரதம் இருந்து வந்த முருகனின் உடல்நிலை நேற்றுமுன்தினம் இரவு மோசமானது. உடனடியாக அவர் வேலூர் அரச மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நளினியின் உடல்நிலையும் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## வடகொரியா மீது கடுமையான எதிர் நடவடிக்கை வேண்டும்

### தென்கொரிய மக்கள் கருத்து

சியோல்,ஜூலை14

வடகொரியா ஏவுகணைப் பரிசோதனை நடத்தியமைக்கு எதிராகக் கடும் பிரதிபலிப்புக் காட்டப்படவேண்டும் என்று தென்கொரிய பொதுமக்கள் கருதுகிறார்கள். தென்கொரிய மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலிருந்து இது தெரியவந்துள்ளது. ஆனால், வடகொரியா நடத்தியுள்ள ஏவுகணைப் பரிசோதனை அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளதா என்பதில் தென்கொரியர் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

கடந்த வாரம் வடகொரியா நடத்திய ஏழு ஏவுகணைப் பரிசோதனைகள் தொடர்பாகக் கடுமையான பிரதிபலிப்புகள் காட்டப்படவேண்டும் என்று தென்கொரியர்கள் கருதுகிறார்கள். இந்த ஏவுகணைகளில் ஒன்று அமெரிக்க எல்லைப் பகுதியைக்கூட தாக்கக்கூடியது என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

பொருளாதாரத் தடையினால் நிலைமை மேலும் மோசமடையலாம் என்று தென்கொரிய அரசு கருதுகிறது. மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அரசின் இந்தக் கருத்தை ஆதரிக்கிறார்கள். (ப)


## மூப்பனார் வாழ்க்கை திரைப்படமாகிறது

சென்னை,ஜூலை14

காங்கிரஸ் தலைவர் ஜி.கே.மூப்பனாரின் வாழ்வும், அரசியல் செயற்பாடுகளும் திரைப்படமாகத் தயாரிக்கப்படுகின்றது.

காமராஜ் திரைப்படத்தைத் தயாரித்த ரமணா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் இத்திரைப்படத்தைத் தயாரிக்கின்றது.

பாரம்பரிய குடும்பத்தில் பிறந்த மூப்பனார், தியாகத்தை வலியுறுத்தும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர் ஆனது முதல், இந்திய தேசத்தின் ஒட்டுமொத்த கவனத்தையும் கவர்ந்த தருணம் வரையிலான அனைத்துச் சம்பவங்களையும் உள்ளடக்கி இத் திரைப்படம் தயாரிக்கப்படவுள்ளது. (202)



மொங்கோலிய அரசின் 800 ஆவது ஆண்டு விழா தற்போது நடைபெற்று வருகிறது. இதில் முக்கிய விழாவான நாதம் விழா மொங்கோலிய தலைநகர் உலன்பாதரில் நேற்று முன்தினம் தொடங்கியது இவ்விழாவில் 10 வயது சிறுவன் உடலை வளைத்து வித்தை காட்டுகிறான்.

## உலக அரங்கில்

## தீவிரவாதத்தால் இந்தியாவை எவரும் மண்டியிட வைக்க முடியாது!

### பிரதமர் மன்மோகன்சிங் உறுதி



புதுடில்லி,ஜூலை14

இந்தியாவை தீவிரவாதத்தால் மண்டியிட வைக்க முடியாது. இந்தியாவின் முன்னேற்றப் பாதையிலும் யாரும் குறுக்கிட முடியாது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

மும்பை தொடர் குண்டு வெடிப்பையடுத்து பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடந்து அவர் உரையாற்றுகையில்:-

ஒருங்கிணைந்த இந்தியாவின் அடையாளச் சின்னமாக மும்பை மீண்டும் எழுந்து நிற்கும். மீண்டும் ஒரு முறை சொல்கிறேன் இந்தியாவை யாரும் மண்டியிடச் செய்ய முடியாது. இந்தியாவின் முன்னேற்றப் பாதையில் யாரும் குறுக்கே வர முடியாது. நாட்டின் பொருளாதார சக்கரம் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கும். இந்தியா தொடர்ந்து மேலான நிலைமையை அடையும். உலக அரங்கில் நிமிர்ந்து நிற்கும்.

மும்பை மற்றும் ஸ்ரீநகர் மக்கள் மீண்டும் தீவிரவாதத்தின் ரணத்தைத் தாங்கியுள்ளனர். இந்த துயரமான நேரத்தில் நாடே அவர்களின் பக்கம் இருக்கும். நமது நாட்டின் எதிரிகள் நமது அமைதி மற்றும் வளர்ச்சியை சீர்குலைக்க முற்படுவது இது முதல் முறையல்ல. இதுபோன்ற நேரங்களில் இந்தியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிற்பர் என்பதை அந்த தீய சக்திகள் இன்னும் உணர்ந்துகொள்ளவில்லை.

இந்தத் துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான உதவிகளை அரசு செய்யும். இந்த தீவிரவாதச் சவால்களை எதிர்கொள்ள என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் அரசு செய்யும். தீவிரவாதத்திற்கு எதிரான இந்தப் போரில் நாம் வெற்றிபெறுவோம்.

நம்முடைய மன உறுதியை யாராலும் சீர்குலைக் முடியாது. நீங்கள் தொடந்து அமைதியாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.வதந்திகளை நம்ப வேண்டாம். நம்மை யாரும் பிரித்து ஆள அனுமதிக்கக் கூடாது. நமது ஒற்றுமையில்தான் நமது பலம் உள்ளது. ஒரே மக்களாக, ஒரே நாடாக நாம் இணைந்து நிற்போம் - இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். (202)

## தற்கொலைப் படைத் தாக்குதலில் ஈராக்கில் ஏழுபேர் கொல்லப்பட்டனர்!

பக்தாத்,ஜூலை14

ஈராக்கில் தற்கொலைப் படை தீவிரவாதி ஒருவர் நேற்றுமுன்தினம் உணவு விடுதியில் நடத்திய தாக்குதலில் ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கில் சதாம்ஹுசேன் ஆட்சிக்கு பிறகு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்காவின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரவாதிகள் அவ்வப் போது [illegible] சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

தலைநகர் பக்தாத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள உணவு விடுதிக்குள் நேற்று முன்தினம் ஒரு மர்ம நபர் நுழைந்து, தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச்செய்தார். இந்த சம்பவத்தில் ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கில் நடைபெறும் தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசனை செய்வதற்காக, அமெரிக்க இராணுவ அமைச்சர் ரம்ஸ்பீல்டு முன்னறிவிப்பின்றி ஈராக் சென்றுள்ள நேரத்தில் தற்கொலைப்படை தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

**Digital** வீடியோ கமரா **(Canon XL1S), Focus Light -2**, உழவு இயந்திரம் **Massey Ferguson (270 - 28 XX)** என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு : **S**.இரத்தின சிங்கம், ஐயனார் கோயிலடி, கொடிகாமம். **T.P.:** 077 488195, 077 9773693. (52225)

**Sony Digital Vidio Camera 990 Digital 200m, Samsong Camera Digimasc A4/Ceytav 40 D.C.3.3V** என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு : 234, **K.K.S.** வீதி, யாழ்ப்பாணம். **T.P.No:** 021 222 2573 (சி-50205)

## தவறிவிட்டது

அப்புத்துரை தவமணிதேவியின் தேசிய அடையாள அட்டை (527893909V), இராச நாயகம் அனுசியாவின் தேசிய அடையாள அட்டை (785724933V), இராசநாயகம் ஆனந்தாவின் தேசிய அடையாள அட்டை (791903670V) என்பன யாழ். பஸ்தரிப்பிடத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புதிய அசோகன் புடைவைக் கடை (பஸ் நிலையம் முன்பாக), நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (52200)

அருமைநாதன் அசோகத் என்பவரது தேசிய அ.அட்டை (832391417V), விசேட அ.அட்டை (091002153) **Commercial Bank ATM card** அடைவுச் சிட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 11.07.2006 அன்று முகமாலைக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருமைநாதன் அசோகத், கைதடி கிழக்கு, கைதடி என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். **T.P.No:** 0776333335 (52219)

## தவறவிடப்பட்டுள்ளது

சுந்தரம் பெனான்டோ என்பவரது **N.I.C** இல. (722904508**V**) யாழ்ப்பாணம் - நாவற்குழிக்குமிடையில் 01.07.2006 அன்று தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கொழும்புத்துறை, வளம்புரம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (52200)

# மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை14

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'வைகறை' மலர் வெளியீட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் செல்வி அ. கந்தையா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார்.

நூலின் வெளியீட்டுரையை ஆசிரியர் ஆ.ஆறுதிருமுருகனும் ஆய்வுரையை பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் நிகழ்த்தவுள்ளனர். (ரி)

# போசாக்கு முத்திரைகள்

தென்மராட்சி,ஜூலை14

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்கு முத்திரைகள் சங்க அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் கேட்டுள்ளார்.

(204-117)

## ஒத்து மாறல்

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் [கண்டி வலயம்] பட்டதாரி ஆசிரியராக (3:I) பணியாற்றுபவர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கலைப் பட்டதாரி ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

*தொடர்புகளுக்கு:*
(52220) **0776701160, 0777238597** (21517)

## தேவை

பற்சிகிச்சை நிலையத்தில் உதவியாளராகப் பயிற்சி பெற்று வேலை செய்வதற்கு 30 வயதிற்கு உட்பட்ட பெண் ஒருவர் தேவை. கந்தர்மடம் சுற்றாடலில் A Level வரை படித்தவர் விரும்பப்படுவர்.
தொடர்பு: 198, அரசடி வீதி, கந்தர்மடம் (52204) (24-)

## ஆசிரியர் தேவை

**vb.net, c#** கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் உடன் தேவை.
தொடர்பு: **0776176476, 0776660613** (சி-50201)

## கலந்துரையாடல்

யாழ்.கோட்டக் கல்வி அலுவலகப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தரம் 5 புலமைப் பரிசில் முன்னோடிப்பரீட்சை விளக்கம், வருடாந்த தொகை மதிப்பு என்பன குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால் அதிபர் மற்றும் தொகை மதிப்பு சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஒருவரையும் கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா கேட்டுள்ளார்.

(204)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 201284298 முதல் 201299836 வரை. சீட்டிழுப்பு இல. 1726 திகதி 12-07-2006

வெற்றி எண்கள் **06 50 60 65** சுப்பர் இல. **06**

ஜக்பொட் பரிசு ரூ. **2,000,000/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இல. + சுப்பர் இல. | 0 | 2,000,000/- | - |
| 4 இல. | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 3 இல. + சுப்பர் இல. | 38 | 5,000/- | 190,000/- |
| 3 இல. | 417 | 1,000/- | 417,000/- |
| 2 இல. + சுப்பர் இல. | 1369 | 500/- | 684,500/- |
| 2 இல. | 20392 | 40/- | 815,680/- |
| 1 இல. + சுப்பர் இல. | 19136 | 20/- | 382,720/- |
| 1 இல. | 289994 | 10/- | 2,899,940/- |
| மொத்தம் | | | 7,389,840/- |
| தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் வெற்றி | 5 | 120,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 331,353 | | 7,989,840/- |

ரூ. 120,000 பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெற்ற 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 201284950-0-10 |
| கேகாலை | 201296502-2-19 |
| கொழும்பு | 201297752-2-36 |
| கம்பஹா | 201296520-8-68 |
| புத்தளம் | 201291811-8-05 |

தொடர் இல. 201202256 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2006 ஜூலை 15 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 2,774,550/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## நீர்வேலி மேற்கு
# மாலை வைரவர் தேவஸ்தானம் வருடாந்த பொங்கல் விழா

அடியார்களே!

அருள்மிகு மாலை வைரவர் பெருமானின் வருடாந்த பொங்கல் விழா இன்று (14-07-2006) வெள்ளிக்கிழமை பி.ப.5.30 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி நாளை காலை 10 மணிவரை நடைபெறும். அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**நீர்வேலி.** (52236)(21.17) **-பரிபாலனசபை.**

# புனித ஹென்றியரசர் கல்லூரி தினவிழா அழைப்பு

LABOR OMNIA VINCIT IMPROBUS

**எமது கல்லூரித் தினவிழாவை ஒட்டி நாளை (15.07.2006 சனிக்கிழமை காலை 8 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து காலை விருந்து ஒன்றுகூடலும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகளைச் சிறப்பிக்க கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**கல்லூரிக் குடும்பம்,**
(52235) **புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.**

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி இ.எலிசபெத்தின் அன்புக் கணவர்

# வோல்டர் இருதயராஜன்

அவர்களின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம். (52233)
**அதிபர். ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்கள்.**

# கேள்வி கோரல்

DEZA DDC DSC SDC COSUDE

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (SDC) யாழ்ப்பாணக் கள அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள மின் இணைப்புகளைப் பராமரிக்கவும் அது சம்பந்தமான மேலதிக சிறிய திருத்த வேலைகளுக்காகவும் மாதாந்த அடிப்படையில் தகுந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

18.07.2006 செவ்வாய்க்கிழமை காலை 9 - 12 மணிவரை அலுவலகத்தில் உள்ள மின் இணைப்புகளைப் பார்வையிடலாம். சகல விண்ணப்பங்களும் மூடிய உறையில் இடப்பட்டு முத்திரையிட்டு 21.07.2006 மாலை 4 மணிக்கு முன்னதாக அலுவலகத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

*** திருத்த வேலைக்கான தேவை ஏற்படும் போது அறிவிப்பின் ஒரு மணித்தியாலத்திற்குள் சமுகமளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.**

முகவரி:
**சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (SDC)**
**521/11, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
(522..) **தொலைபேசி - 021 222 3928**

# யா/இணுவில் மத்திய கல்லூரி ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு வைபவமும் -2006

| | |
|---|---|
| *தலைவர்:* | திரு.அ.சதானந்தன் [அதிபர்] |
| *காலம்:* | 15.07.2006 சனிக்கிழமை மு.ப.9 மணி |
| *இடம்:* | **கல்லூரி சரஸ்வதி கலையரங்கம்** |
| *பிரதம விருந்தினர்:* | திரு.ப. விக்கினேஸ்வரன் அவர்கள் [வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்] |
| *சிறப்பு விருந்தினர்:* | திரு.து.எங்கரசு அவர்கள் [கோட்டக் கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கோட்டம்] |
| *கௌரவ விருந்தினர்:* | திரு.அ.குகதாசன் அவர்கள் [பிராந்திய உதவி முகாமையாளர் மக்கள் வங்கி] |
| *பரிசில் வழங்கல்:* | *பிரதம விருந்தினர்* |

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்

(52230)(21.17.45)

# பழைய மாணவர்கள் சங்கம் யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

தலைவர் :- திரு.பொ.சுந்தரலிங்கம் [கல்லூரி அதிபர்]
இடம் :- துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம் :- 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி (ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்)

குறிப்பு:- * பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 28.07.2006 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.
* சகல அங்கத்தவர்களும் 30.07.2006ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

**-அதிபர்.**

(52231)(26.17.45)

# சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடம்
## முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இம்மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியான விருப்பமுள்ள பட்டதாரிகளை பட்டச்சான்றிதழ் மற்றும் அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் 18.07.2006ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு கச்சேரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இமெல்டா சுகுமார்,**
அரசாங்க அதிபர், (சி-50206)
முல்லைத்தீவு மாவட்டம் (21.17.45)

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகை வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2006

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவகாலத்தில் தற்காலிகக் கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எதிர்வரும் 27.07.2006ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000/- வும் ஏனைய கடைகளுக்கு ரூபா 2000/-வும் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 300/- வும் (வற்வரி நீங்கலாக) கட்டி பற்றுச் சீட்டைப் பெற்று விண்ணப்பப் படிவத்தை மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 27.07.2006ஆம் திகதி காலை 10.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் யாவையும் இவ்வலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் உரிய நேரத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் எதிர்வரும் 27.07.2006ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்திபெற்றவர் கேள்வித் தொகையை முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

*குறிப்பு:* சபையினால் வழங்கப்பட்ட கடைகள் தவிர வேறு கடைகள் கோயில் சுற்றாடல் திருவிழாக்காலத்தில் திறந்து நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

**சீ.வி.கே.சிவஞானம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

**மாநகராட்சி மன்றம்**
**யாழ்ப்பாணம்.**
12.07.2006

(சி-50208)(21.17.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 06 – 08 – 1950



உதிர்வு 14 – 06 – 2006

*அமரர் பிலிப் மரியநாயகம் (செவின்)*

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
என்றும் எம் உயர்வுக்காய் உழைத்திட்ட

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 14.06.2006 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் நினைவைக் கூறும் நாள் இன்று (14.07.2006) வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு இரங்கல் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு**: உதவிக்கரம் நீட்டிய கரங்கள்:

ஜோண்சன் குடும்பம் (லண்டன்), உறவினர்கள் (பிரான்ஸ்), கரன் (திருப்பதி பழச்சோலை), கண்ணன் (வர்த்தக நிலையம்), லக்மன் (பழச்சோலை), தந்தி மூலம் அனுதாபத்தை தெரிவித்த குடும்பத்தினருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றியை தெரிவிக்கிறேன்.

முத்தமிழ் வீதி,
கொட்டடி,யாழ்ப்பாணம். (52240)

மனைவி,
பிள்ளைகள்.

# குருமார் தேவை

*வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திற்கு குருக்கள், உதவிக்குருக்கள் (மண்டபம்) உடன் தேவைப்படுகின்றது. தகுதி உள்ளவர்கள் ஞாயிற்றுக்கிழமை (16.07.2006) காலை 9 மணிமுதல் 12 மணிவரை தேவஸ்தானத்தில் தொடர்பு கொள்ளவும். வேதனம் நேரில் பேசி தீர்த்துக்கொள்ளவும்.*

**க.வைத்திலிங்கம் செட்டியார்**
**பரம்பரை தர்மகர்த்தா.**


(சி/50217)

சமயத்தொண்டனும், சமூகப் பற்றாளனுமாகிய

## அமரர் கந்தையா (J.P.)

[தலைவர்- கோக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை போஷகர்-வளர்மதி நிறைவாழ்வகம், மனோன்மணி சனசமூக நிலையம்]

# நினைவஞ்சலி நிகழ்வு



மேற்படி நினைவஞ்சலி நிகழ்வு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் உபதலைவர் சி.மாதவகுமார் தலைமையில் நடைபெறும்.

இடம் : கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய திருமண மண்டபம்.
காலம் : நாளை (15.07.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணி

அஞ்சலி உரையினைத் தொடர்ந்து அன்னாரின் திருவுருவப் படம் கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய மண்டபத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டு மதியபோசன நிகழ்வும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

* கோக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை.
* கோக்குவில் வளர்மதி நிறைவாழ்வகம்.
* கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம்.
* கோண்டாவில் மக்கள்.

(சி/50213)

# அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சை வழிகாட்டி

**அண்மையில் நடைபெற இருக்கும் போட்டிப் பரீட்சைக்கானது.**

* கிரகித்தல்
* பொதுஅறிவு
* கல்விக்கொள்கையும் நிர்வாகமும்

கடந்தகால பரீட்சை வினாக்களுடன் முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களும்

**P.உமாசங்கர் - விலை 200 /-**

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# S.L.E.A.S வழிகாட்டி

எதிர்வரும் 29.07.2006 இல் நடைபெறவிருக்கும் கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை வழிகாட்டி

நுண்ணறிவு
கிரகித்தல்

* 1000 வினாக்கள் - விடைகளுடன்
  இப்பரீட்சைக்கென மிக இறுதியாக நடைபெற்ற கடந்த
* கால வினாவிடைகள்
  எதிர்பார்க்கை வினா - விடைகள்

**P.உமாசங்கர் - விலை 250 /-**

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# போட்டிப் பரீட்சை வகுப்புகள்

S.L.A.S | S.L.E.A.S

*சனி,ஞாயிறு 1 - 4*

*முகாமைத்துவ உதவியாளர்*

*சனி,ஞாயிறு 11.30-1.30*

D.M.I ஆரியகுளம் சந்திக்கு கிழக்கே

# பொருளியற் கல்லூரி

யாழ் நகர் இணுவில்

*(இரு இடங்களிலும்)*

குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க, உரையாட

**Spoken English with Grammar**

**Lecture by: Mr.K.Nishanthan (Dip.In.Eng)**

ஆரம்பமாகி நடைபெறுகிறது.

* யாழ். நகர் -At 1.00 P.M (சனி, ஞாயிறு)
* இணுவில் -At 9.00 A.M(சனி, ஞாயிறு)

அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

# ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
வடிவேல், மனோரமா நடித்த
இம்சை அரசன் 23ஆம் புலிகேசி
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-47139)

# நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

ரிச்சட், மதுமிதா, நாசர் நடித்த

## நாளை

சண்டைகள் நிறைந்த சித்திரம்
காட்சி நேரம் : 10.30, 2.30

(சி-49188)

# லயன்ஸ் கழகத்தின் பதவி ஏற்பு வைபவம்

வலிதென்மேற்கு, ஜூலை14

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் 2006-2007 வருடத்திற்கான புதிய நிர்வாக சபையின் பதவிஏற்பு வைபவமும், பதவிப் பிரமாண நிகழ்வும் எதிர்வரும் 23ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத்தலைவர் லயன்.ரி.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிராந்திய தலைவர் லயன்.எஸ்.சிவராஜேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இந் நிகழ்வில் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகமும் லியோ கழகமும் இணைந்து மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-135)

# இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம் மின்தடை பற்றிய அறிவித்தல்

சென்ற 04.07.2006 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மின்தடை ஏற்படும் என்று இருந்த இடங்களுக்கு (கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்) 15.07.2006 ஆம் திகதி சனிக்கிழமை அன்றே மின்தடை ஏற்படும் என்பதையும் ஏனைய இடங்களுக்கான மின்தடை பற்றிய அறிவித்தலில் மாற்றம் எதுவும் இல்லை என்பதனையும் மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறேன்.

மின்பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்.

(சி/50212)

# Annual Prize Giving & Founder's Day

**Vembadi Girls' High School - Jaffna**

**DATE** : 14.07.2006 Friday 10 am

**Venue** : Mable Thambia Hall

**Chief Guest** : Mrs.Sivambihai Ponnampalam
(Former, Deputy Principal, Vembadi Girls' High School)

**Parents, Old Girls and Well Wishers are Cordially invited.**

(C/50218)

Principal, Staff and Student

# இந்தியாவில் கல்வி

## பிருந்தாவன் கல்லூரி

AICTE அங்கீகாரமும், அரசாங்க அனுமதி பெற்றதும் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததும்

**Bangalore University - India**

2nd Cross, Bhoopasandra, RMV 2nd Stage,
Bangalore 04, India
Tel: 91 - 80 - 23414557 / 23417833
Website: www.brindavancollage.com
E-mail: info@brindavancollage.com

*மூன்று வருட பட்டப்படிப்பு பாடநெறிகள்*

B.C.A. Computer Application
B.B.M Business Management
B.Sc. Microbiology
B.Sc. Biotechnology
B.Sc. Genetics
B.Sc. Computer Science

*SLEEC கண்காட்சியகத்திற்கு 14 ஆம் திகதியிலிருந்து 16 வரை விஜயம் செய்யுங்கள்!*

A/L பரீட்சை முடிவு வரும் நிலை

அல்லது

A/L 2 பாடங்களில் சித்தி


இவ்வருடமே இணையுங்கள் ஒரு வருடத்தை சேமியுங்கள்!

*★ மூன்று வருட பட்டப்படிப்பு பாடநெறி ★ ஜூலை மாத இறுதியில் ஆரம்பம் ★ 200க்கு மேற்பட்ட இலங்கை மாணவர்களுடனும் 42 நாட்டு மாணவர்களுடனும் இணைந்து கற்றல் ★ கடந்த 12 வருடங்களில் 500க்கு மேற்பட்ட இலங்கையர்கள் இணைந்துள்ளனர். சுமார் 300 மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியேறி பல அரச - தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். அல்லது இலங்கையிலோ, வெளிநாடுகளிலோ பட்டப்பின் படிப்பைத் தொடர்கிறார்கள். ★ ஆண் - பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக தங்குமிட வசதிகள் ★ சிறந்த அறிவுடைய போதனாசிரியர்கள் ★ அதிநவீன விஞ்ஞானகூட வசதிகள் ★ சிறந்த நூலக வசதி ★ வசதியான கல்விக் கட்டணம் ★ இலங்கைக்கருகில் ★ இப்போதே இணையுங்கள் 2009 இல் பட்டப்படிப்பை முடித்து ஒரு வருடத்தை சேமியுங்கள்.*

Company Secretarial Services (Pvt) Ltd.
285C-1/1, Stanley Tillakaratne Mw, Nugegoda.
Tel: 011-2854438 / 0777-317043

# மரண அறிவித்தல்

## செபஸ்ரியாம்பிள்ளை வோல்டர் இருதயராஜன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மார்ட்டீன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளைவோல்டர்இருதயராஜன் (ராஜன்) 12.07.2006 புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை, மரியமதலேனாவின் அன்பு மகனும் எலிசபெத்தின் (திருக்குடும்ப கன்னியர் மடம், ஆசிரியை) அன்புக் கணவரும் ஜக்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) துஷாந்தி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) நிலக்ஷன் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) டிலக்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சூசையின் அன்புத்தம்பியும் மற்றும் பென்சமின், அன்ரனி, சவிரி (இந்தியா) செல்வராயர் (டென்மார்க்), செபமாலை, யசிந்தா, கஸ்பார் (டென்மார்க்), மெல்கியூ (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வத்தின் சகலனும், டெனிசியா, ஜெயந்தினி ஆகியோரின் அண்ணனும், திரேசா, ஜெனிற்றா, ஜோன்சன், ரூபன், பென்சமின், யசிந்தா ஆகியோரின் மைத்துனரும் சோதிமணி, திரேசா, திலகம், தேன்மொழி, ராஜி, பொலிகாப், பபா, ஞானமுத்து ஆகியோரின் மைத்துனரும் நிக்சன், அன்ரன், பபி, பேபி ஆகியோரின் சித்தப்பாவும், றொகான், அலெக்ஸ் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் பூதவுடல்48, மார்ட்டீன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (15.07.2006) சனிக்கிழமை மு.ப 10மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

48, மார்ட்டீன் வீதி,
யாழ்ப்பாணம். (52237)

தகவல்:
அன்பு மனைவி எலிசபெத்,
பிள்ளைகள்.

# பட்டமளிப்பு விழா

யாழ். அகவொளி நிறுவனத்தின் உளவியல் டிப்ளோமா கற்கைநெறிப் பட்டமளிப்பு விழா நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். சென் பற்றிக்ஸ் வீதியில் உள்ள அகவொளி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. 32 பேர் இக்கற்றை நெறியைப் பூர்த்தி செய்துள்ளனர். அகவொளி நிறுவனமும் அயர்லாந்து கோல்வே பல்கலைக் கழகமும் இணைந்து பட்டத்தினை வழங்குகின்றது.

# மரண அறிவித்தல்

## *திருமதி இராமலிங்கம் பரிமளாதேவி*



நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் பரிமளாதேவி 12.07.2006 அன்று காலமானார். அன்னார் இராஜகுமாரின் (குமார்-பிரபல அரச கட்டட நிறுவனம் (K.M.P) கட்டட ஒப்பந்தகாரர்) தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

387/1, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (52238)

தகவல்:
இராமலிங்கம் குடும்பம்
(K.M.P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக் கருதி தென்னிலங்கைத் தமிழர்கள் வன்னியில் குடியேற வேண்டிய நிலை ஏற்படும்

## பாதுகாப்பு வழங்க அரசு தவறிவிட்டது என்று மனோ கணேசன் எம்.பி. ஆவேசம்

தென்னிலங்கையில் வாழும் அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்று உயிர் வாழும் பாதுகாப்பு இல்லை. சமீபத்தில் இரத்தினபுரி பம்பேகமுவ தோட்டத்தில் நடைபெற்று இன்னமும் புகைந்துகொண்டிருக்கும் சம்பவம் இதற்கு உதாரணம்.

இது என்றாவது ஒருநாள் நடக்கும் சம்பவம் இல்லை. அப்பாவி தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் இன்று தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. வடக்கு - கிழக்கு நிகழ்வுகளுக்கு பதிலடியாக இவர்கள் தாக்கி அழிக்கப்படுகின்றார்கள். இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அரசாங்கத்தால் முடியவில்லை. அதற்கான எண்ணமும் கிடையாது. தமிழ் கட்சிகளாலும் இம்மக்களுக்கு ஆறுதல் கூற மட்டும்தான் முடிகின்றது.

எனவே, எதிர்காலத்தில் இந்த அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் தமது உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வன்னிக்குச் சென்று குடியேற நேரலாம்.

கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ நிலையத்தில் போருக்கெதிரான முன்னணியினால் புதன்கிழமை நடத்தப்பட்ட கலந்துரையாடலில் கலந்துகொண்டு சிங்கள மொழியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

தென்னிலங்கை தமிழர்கள் இன்று வடக்கு - கிழக்கின் தமிழ் தேசிய போராட்டத்திற்கும், தெற்கின் சிங்கள பௌத்த அடிப்படை வாதத்திற்கும் இடையில் சிக்கி தவிக்கிறார்கள்.

குறிப்பாக இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை ஆகிய மாவட்ட தோட்டத் தொழிலாளர்களும் கம்பஹா, புத்தளம், காலி ஆகிய ஒதுக்குப்புற மாவட்ட அப்பாவி தமிழ் மக்களும் தொடர்ச்சியாக பேரினவாத தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

சமீபத்தில் இரத்தினபுரியிலும், களுத்துறையிலும், நீர்கொழும்பிலும், வத்தளையிலும் நடைபெற்றுள்ள சம்பவங்கள் மாத்திரமே வெளியுலகிற்கு தெரியவந்துள்ளன. ஆனால், இத்தகைய சம்பவங்கள் இன்று சிங்கள பௌத்த இனவாதிகளால் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலைமைக்கு இம்மக்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தை தவிர வேறெதுவும் இருப்பதாக தெரியவில்லை. இம்மக்கள் இனிமேல் இந்தியாவிற்கு சென்று குடியேற முடியுமா? கடலில்தான் குதிக்க வேண்டுமா? இந்திய வம்சாவளி மக்களாகிய இவர்களது பாதுகாப்பு தொடர்பில் இந்திய அரசாங்கத்திற்கு எந்தவித அக்கறையும் கிடையாது.

எனவே, இவர்களுக்கு தமது உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ள ஒரேவழி வன்னி பெருநிலத்திற்கு சென்று குடியேறுவதாகும். இனப்பிரச்சினை என்பது வடக்கு - கிழக்கு சம்பந்தப்பட்டது என எண்ணும் சிங்கள அரசியல்வாதிகளின் கண்களை இந்த உண்மைகள் திறக்கவேண்டும்.

கடந்த 200 வருடங்களாக இந்நாட்டை வாழவைத்துக்கொண்டிருக்கும் அப்பாவி தோட்டத்தொழிலாளர்களுக்கு சிங்கள தேசம் வழங்கிவரும் பரிசு இதுவாகும். போரை நிறுத்தி சமாதானத்தை வடக்கு - கிழக்கில் நிலைநாட்ட விரும்புபவர்கள் முதலில் தென்னிலங்கையில் வாழும் அப்பாவி தமிழர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை பெற்றுத்தரவேண்டும். அல்லது இங்கு வாழும் தமிழர்களை பாதுகாக்க முடியாது என்று அறிவித்துவிட வேண்டும் என்றார் மனோ கணேசன் எம்.பி. (த)

# பிரிட்டன் அரசியல் பிரமுகர்களுடன் தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பு

## இலங்கை நிலைவரம் குறித்து விரிவாக விளக்கினர்

பிரிட்டன்,ஜூலை 14

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தமிழர்கள் மீதான அரசின் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவொன்று பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கின்றது.

தற்போது ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் பிரிட்டனின் அபிவிருத்தி அமைச்சர் ஜரத்தோமஸ், வெளியுறவு அமைச்சின் சிறப்புப் பிரதிநிதி சைமன்பெரி, நாடாளுமன்ற உறுப்பினர் பிட்ஸ் வோல்வ் ஆகியோரைச்சந்தித்தனர்.

இலங்கையில் அரச படைகள் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்தும், தமிழ் மக்கள் விரும்பும் அரசியல் தீர்வு குறித்தும் பிரிட்டிஷ் பிரமுகர்களுக்கு இச்சந்திப்பின்போது விரிவாக விளக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படையினருக்கு பயிற்சியளிக்க பிரிட்டிஷ் கடற்படை முன்வந்திருக்கின்றதையொட்டி தமிழ் மக்கள் கொண்டிருக்கின்ற அதிருப்தியை தமிழ்க் கூட்டமைப்பினர் பிரிட்டிஷ் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தினர் என்றும் கூறப்பட்டது.

## காங்கேசன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் நேரடி மோதல் இடம்பெற்றதா அல்லது படையினரின் ஒத்திகை இடம்பெற்றதா என்பது குறித்து உறுதியான தகவல்கள் நேற்றிரவுவரை வெளியாகவில்லை.

அந்தப்பகுதியில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. எனினும் தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

வரணி படைமுகாமில் இருந்து நேற்றிரவு நாகர்கோயில் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(1-11-70-117)

## இந்தியத் தூதர் ரணிலை நாளை சந்திக்கிறார்

கொழும்பு, ஜூலை 14

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தியத் தூதர் நிருபமா ராவைச் சந்திக்கவுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டன.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கட்சியின் கொள்கை பற்றி இந்தியத் தலைவர்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 19ஆம் திகதி டில்லி செல்ல இருப்பது தெரிந்ததே.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை இந்தியத் தூதர் நாளை சந்திக்கிறார். (1)

## தயா மாஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் இயக்கத்தினர் கொழும்பிலும் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும், இவ்வாறான சூழ்நிலையில் அரசு இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது படையினர் மத்தியில் விரக்தி நிலையை ஏற்படுத்திவிடுமென்றும் அமைச்சர்களும், அரசின் நேச அணிகளின் முக்கியஸ்தர்களும் நேற்று தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்ததை அறிய முடிந்தது.

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற செயற்பாடுகளைப் புறக்கணித்து யாழ். நீதிமன்றத்தில் கூடினர்.

யாழ். நீதிமன்ற வாசலில் முற்பகல் 10 மணிமுதல் ஒரு மணிநேரம் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றைச் சட்டத்தரணிகள் நடத்தினர்.

இந்தப் போராட்டம் காரணமாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட சகல நீதிமன்றங்களும் நேற்றுக்கூடவில்லை.

நேற்று இடம்பெறவிருந்த சகல வழக்குகளும் வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்திலும் நண்பகல் 12.30 மணிமுதல் ஒரு மணிநேரம் சட்டத்தரணிகள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். (1-86-111-190)

## அப்பல்லோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை நிபுணர் டாக்டர் மகேஷ் நரேஷ் இந்த சிகிச்சையைமேற்கொண்டார்.

தயா மாஸ்டரின் உடல்நிலை இன்று முழுமையாகச் சீராகுமென எதிர்பார்க்கப்படுகிறது. உடல்நிலை சீரடைந்த பின்னர் இன்னும் ஓரிரு நாள்களில் அவர் வன்னி திரும்புவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தயா மாஸ்டர் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை வார்ட் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புளொட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதேவேளை -

'தமிழ்த் தேசிய ஆதரவு புளொட் உறுப்பினர்கள்' என்ற பெயரில் நேற்றிரவு வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா மாவட்டத்திலுள்ள புளொட் உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வின் கைக்கூலிகளாகச் செயற்படுவதைத் தடுத்துவந்த தமிழீழத் தேசிய உணர்வுடைய பவான் (இரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா) கடத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் ஆரம்பம் முதலே வவுனியா மாவட்டத்தின் புளொட் அமைப்பின் படுகொலைகளை எதிர்த்து உள் இருந்து குரல் கொடுத்துவந்தவர். மாணிக்கதாசனாலும், அலவாங்கு தாசனாலும் வவுனியா மாவட்டத்தில் எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் பிடித்துக்கொல்லப்பட்ட வேளையில் அதற்கெதிராகக் குரல் கொடுத்தமையினாலும் தடுக்கமுற்பட்டமையினாலும் மாணிக்கதாசனால் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தவர். உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்ததுடன் கைதுசெய்து சுமார் ஒருமாதம் அளவில் விசாரிக்கப்பட்டு தனது அமைப்பின் படுகொலைகளிற்கெதிராக கருத்துக்களை வெளியிடக்கூடாதென மிரட்டி விடுவிக்கப்பட்டிருந்தார்.

மாணிக்கதாசன், அலவாங்கு தாசன் போன்றோர் கொல்லப்பட்டு வவுனியா மாவட்டத்தில் புளொட்டின் அத்துமீறல்கள் ஓரளவிற்கேனும் மட்டுப்படுத்தப்பட்டதில் பவானின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்தும் புளொட் அமைப்பினரை தமிழீழத் தேசியத்திற்கு எதிராகவும் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராகவும் செயற்படவைப்பதில் ஸ்ரீலங்கா அரச புலனாய்வினரும் புளொட் தலைமையினரும் அழுத்தம் கொடுத்து வந்தபோதும் அதனை ஏற்கமறுத்து தமிழ் உணர்வுடன் செயற்பட்டவர்.

தமிழ் இளைஞர்களின் படுகொலைகளை எதிர்த்தும் மாணிக்கதாசனின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்துவதிலும் பவானுடன் இணைந்து செயற்பட்ட புளொட் அமைப்பின் அப்போதைய நிதிப் பொறுப்பாளர் வித்தி(கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்) அவர்கள் 2000 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் வவுனியாவில் புளொட்டின் தலைமையின் ஆசீர்வதத்துடன் கைதுசெய்யப்பட்டு இராணுவப் புலனாய்வினரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் காணாமற் போயிருந்தார். வித்தியின் மறைவிற்குக் காரணமானவர்களே இன்று பவானின் கொலைக்கும் காரணமாகியுள்ளார்கள். புளொட் தலைமை தமிழ்த்தேசிய உணர்வுடைய தனது அனுதாபிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் இதற்கான பதிலைக் கூறியே ஆகவேண்டும் - என்றுள்ளது.

## அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக இருந்தன. ஆனால் இறுதி நேரத்தில் இக்கட்சிகள் இது விடயத்தில் பின்வாங்கிவிட்டன.

இரு கட்சிகளினதும் இந்த நடவடிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இது குறித்ததான தனது அதிருப்தியை ஜனாதிபதி தனக்கு நெருக்கமானவர்களிடம் வெளிப்படுத்தியிருக்கிறார் எனவும் அறிய முடிந்தது.

அரசாங்கத்தில் இணையவிருந்த இந்தக் கட்சிகள் பின்வாங்கியதன் காரணமாக அமைச்சரவை மறுசீரமைப்புச் செயற்பாட்டிலும் தாமதம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இரண்டு கட்சிகளும் இறுதி நேரத்தில் மஹிந்தவை ஏமாற்றிவிட்டு, தங்கள் முடிவிலிருந்து ஏன் பின்வாங்கிக் கொண்டன என்பதற்கான காரணங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் அரசோடு இணைவதற்காக நடத்தப்பட்ட பேரம் பேசல்களில் ஏற்பட்ட இழுபறிகள், இரண்டு கட்சிகளுக்குள்ளேயும் ஏற்பட்ட அதிருப்தி அலைகள் காரணமாகவே இந்தப் பின்வாங்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

UNIT பிரத்தியேகப்படுத்துகின்றது
Hardware Networking
Just Rs. 1000/- Only
வேகப் பயிற்சி நெறி (பாடத்திட்டம் மாற்றமில்லாமல்)
Just Rs. 1500/- Only
வார இறுதி நாட்களில்
For Employees & Students
இலவச பயிற்சிக் கோவை மற்றும் பல
For Complete Technology
Starts on 15.07.2006 (சனிக்கிழமை)
மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அனுமதிகள் மாத்திரம்
UNIT Education
16/1, Killnar Lane,
K.K.S. Road, Jaffna.
பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை
Near Jaffna Hindu College
TP: 021-4590720 / 0773134737
Rush to Join Limited seats Only

On - Line Classes
எமது நிறுவனத்தில் D.T.P கற்கை நெறியானது On - Line மூலமாக நடைபெறுகின்றது.

| Subjects | Duration | Fees |
|---|---|---|
| Page Maker -7.0 | 20 hours | 1000/= |
| Coreldraw -12 | 20 hours | 1000/= |
| Photoshop -7.0 | 20 hours | 1000/= |

நீங்கள் விரும்பிய நேரத்தில் கற்கலாம்
இக்கற்கை நெறிக்குப் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.
Theory, Practical Books வழங்கப்படும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

Spoken English With Grammar
சனி, ஞாயிறு 10. am
By: BRITTO
அனுமதி வழங்கப்படுகின்றது.
புனிவேசல்

G.A.Q English
Paper Class
திரு.விஜயபாஸ்கர்
சனி, ஞாயிறு 7-8 am
ஆரம்பம்:
15.07.2006 சனி
காலை 7 மணி
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி, இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.